இலவசம்

# அரங்கம் செய்திகள்

கிழக்கு மண்ணில் இருந்து ஒரு தொடர்பூடகம்




வார இதழ்– மட்டுநகரிலிருந்து... www.arangamnews.com வெள்ளி, சித்திரை 06, 2018. இதழ் – 07 இலவசம்

# மட்டக்களப்பு மாநகரின் புதிய நகரபிதாவாக சரவணபவன்



மட்டக்களப்பு மாநகர சபையின் நகர பிதாவாக தியாகராசா சரவணபவன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் முதலாவது அமர்வு வியாழனன்று மாகாண உள்ளூராட்சி ஆணையர் சலீம் தலைமையில் நடைபெற்றது.

மேயருக்கான தேர்வு முதலில் நடைபெற்ற போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான தியாகராஜா சரவணபவனும், தமிழர் விடுதலைக் கூட்டணியை சேர்ந்த சிவலிங்கம் சோமசுந்தரமும் போட்டியிட்டார்கள்.

மொத்தமுள்ள 38 உறுப்பினர்களில் 25 பேர் சரவணபவனுக்கு வாக்களிக்க, 11 பேர் சோமசுந்தரம் அவர்களுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இருவர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

அதனையடுத்து தியாகராசா சரவணபவன் நகர பிதாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார். துணைத்தலைவராக தமிழ் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த கந்தசாமி சத்தியசீலன் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்கான தேர்வின் போது இவரை எதிர்த்து போட்டிக்கு நிறுத்தப்பட்ட தெய்வநாயகம் சிவலிங்கம், சத்தியசீலனுக்கே தனது வாக்கை அளித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



அதில், சபைக்கான தலைவர் மற்றும் துணைத்தலைவர் தெரிவுகள் நடத்தப்பட்டன.

உறுப்பினர்களின் பெரும்பான்மையான விருப்பப்படி நேரடியாக தேர்வுகள் நடைபெற்றன.

இந்தத் தெரிவுகளின் போது ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் சிலர் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களித்திருந்தனர்.

கட்சி சார்பிலான ஆதரவாக ஒருபுறம் பார்த்தாலும் சரவணபவனுக்கான தனிப்பட்ட ஆதரவாகவும் சில உறுப்பினர்கள் கட்சி நிலைப்பாட்டைக் கடந்தும்

தொடர்ச்சி... (பக்கம் - 14)









# சுவிஸில் அரங்கத்தின் விபுலாநந்தர் ஆவணப்படம்




"அரங்கம்" நிறுவனத்தின் தயாரிப்பான, முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் குறித்த ஆவணப் படம் வரும் சனிக்கிழமை (07/04/2018) சுவிஸ் நாட்டில் அறுமுகம் செய்து வைக்கப்படவுள்ளது. சுவிஸ் வாழ் தமிழ் அமைப்புக்கள் பல இணைந்து இந்த அறிமுக விழாவை ஏற்பாடு செய்கின்றனர்.

இந்தப் படத்தை சீவகன் பூபாலரட்ணம் இயக்க, அரங்கத்தின் சார்பில் துஸ்யந்தன் சீவகன் மற்றும் ரகுலன் சீவகன் ஆகியோர் தயாரித்திருந்தனர். இதற்கான தயாரிப்பு அனுசரணையை கனடா நாட்டை சேர்ந்த பாபு வசந்தகுமார் செய்திருந்தார்.

இந்த ஆவணப்பட வெளியீட்டோடு சேர்த்து பாபு வசந்தகுமார் தயாரித்த "தீர்த்தக்கரையினிலே" என்னும் மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலய கானங்கள் அடங்கியை இசைத்தட்டும் அந்த நிகழ்வில் வெளியிடப்படும்.

விபுலாநந்தர் குறித்த இந்த ஆவணப்படம் ஏற்கனவே மட்டக்களப்பில் மாமாங்க பிள்ளையார் ஆலயத்திலும், கனடாவிலும் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மாணவர்களுக்கான அரங்கத்தின் போட்டிகள்

## கட்டுரைப் போட்டி

முதல் பரிசு : ஐயாயிரம் ரூபாய்
இரண்டாம் பரிசு : மூவாயிரம் ரூபாய்
மூன்றாம் பரிசு : இரண்டாயிரம் ரூபாய்

பாடசாலை மாணவர்கள் தமது அதிபரின் அனுமதியுடன் கலந்து கொள்ளலாம்.
போட்டிகள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தனித்தனியாக நடைபெறும். இரு பிரிவுக்கும் தனித்தனியே பரிசுகள் வழங்கப்படும்.

### போட்டி:

பின்வரும் விடயங்களில் ஏதாவது ஒன்று குறித்து 500 சொற்களுக்கு மேற்படாமல் கட்டுரை எழுத வேண்டும்.

1) ஏதாவது ஒரு நாடு (இலங்கை அல்லது வேறு ஒரு நாடு) எதிர்கொள்ளும் ஒரு சுகாதார பிரச்சினை அல்லது சுகாதாரச் சவாலின் தாக்கம் குறித்து விபரிக்கவும்.
2) ஒரு நாடு அல்லது ஒரு அமைப்பு பொதுமக்கள் சுகாதாரத்துறை எதிர்கொண்ட சவாலில் தலையிட்ட சம்பவம் குறித்து விபரிக்கவும். அந்த தலையீட்டின் வெற்றி அல்லது தோல்விக்கான காரணத்தை விபரிக்கவும்

### விதி

-- ஏனைய ஆதாரங்களில் இருந்து நீங்கள் சேகரித்த விடயங்களுக்கான மூலங்களை குறிப்பிடவும்.
-- கட்டுரையை நீங்களே எழுத வேண்டும்.
-- தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரையாளர் நேர்முகச் சோதனைச் செவ்விக்கு அழைக்கப்படுவார்.
-- போட்டியில் கலந்துகொள்வோர் பாடசாலை மாணவராக இருக்க வேண்டும். அதிபரின் கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
--பிரதி பண்ணப்பட்ட கட்டுரைகள் நிராகரிக்கப்படும்.

### ஆலோசனை

பொதுமக்கள் சுகாதாரத்தை பாதிக்கும் ஒரு நோய் அல்லது சுற்றாடல் பிரச்சினையை தேர்ந்தெடுக்கவும்.
--உங்களுக்கு ஆர்வம் உள்ள விடயத்தை தேர்வு செய்யவும்
--இண்டர்நெட் மற்றும் புத்தகங்களை ஆய்வுக்கு பயன்படுத்தவும்
--ஒரு விடயத்தில் மாத்திரம் நிற்கவும்.
--தேர்ந்தெடுத்த விடயத்தை ஆக்கத்திறனுடன் முயற்சிக்கவும்
--இந்தக் கட்டுரை ஒரு விவாதமாக இருக்க வேண்டும். இருக்கக்கூடிய பல தரப்பட்ட பார்வைகளையும், உங்கள் கருத்தையும் அதில் குறிப்பிடவும்.

### உதாரணமான விடயங்கள் சில

தென்னாபிரிக்காவில் மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகள் , உலகெங்கும் அல்கோலால் வரும் ஈரல் நோய்கள். தெற்காசிய சமூகத்தில் நீரிழிவு நோய்.

விண்ணப்பங்களை அனுப்பும் போது, பெயர், பிறந்த திகதி, பாடசாலையின் பெயர், விலாசம் மற்றும் தொடர்பிலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடவும். தலைமை ஆசிரியரின் அங்கீகாரமும் தேவை.

## ஓவியப் போட்டி

**போட்டிகளுக்கான முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது 27 - ஏப்ரல் - 2018 வரை**

முதல் பரிசு : ஐயாயிரம் ரூபாய்
இரண்டாம் பரிசு : மூவாயிரம் ரூபாய்
மூன்றாம் பரிசு : இரண்டாயிரம் ரூபாய்

பாடசாலை மாணவர்களுக்கான இந்தப் போட்டியில் கலந்து கொள்வோர், உலக சுகாதாரம் எதிர்கொள்ளும் சவால்களைச் சித்தரிக்கும் வகையிலான ஓவியம் ஒன்றை வரைய வேண்டும்.

பொதுமக்களின் சுகாதாரத்தில் சுற்றாடல் ஏற்படுத்தும் தாக்கத்தை இந்த ஓவியங்கள் விபரித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ அந்த ஓவியத்தை விபரிக்கும் விளக்கம் ஒன்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எழுத வேண்டும்.

ஏ3 அல்லது ஏ4 காகிதத்தில் அது வரையப்பட்டிருக்க வேண்டும். பென்சில், மை கொண்டு அது வரையப்பட்டிருக்கலாம்.

மூன்று பிரிவாக போட்டி நடைபெறும்.
6-10 வயது
11-14 வயது
15- 18 வயது

மூன்று பிரிவுகளுக்கும் தனித்தனியாக
மூன்று பரிசுகள் 5000 ரூபாய், 3000 ரூபாய் மற்றும் 2000 ரூபாய் வழங்கப்படும்.
போட்டியில் கலந்துகொள்வோரின் வயதை ஆசிரியர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் போது, பெயர், பிறந்த திகதி, பாடசாலையின் பெயர், விலாசம் மற்றும் தொடர்பிலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடவும். தலைமை ஆசிரியரின் அங்கீகாரமும் தேவை.

தொடர்புகளுக்கு :
அரங்கம் நிறுவனம்,
227, பார் வீதி, மட்டக்களப்பு



# அலைகள் ஓய்வதில்லை.

மார்ச் 23 ஆம் திகதி வெளியான எமது அரங்கம் பத்திரிகையை, கையில் வைத்திருப்பவர்கள் அதனைக் கொஞ்சம் திரும்பவும் பார்த்தீர்களானால், அதில் கூறப்பட்ட அனைத்தும் அப்படியே நடந்திருப்பது புரியும்.



ஆம், நேற்று நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றிபெற வாய்ப்பில்லை என்பதை அதில் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருந்தோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட சிறுபான்மைக் கட்சிகள் எப்படி நடந்துகொள்ளும் என்பது முதல், பல விடயங்களை அதில் கோடிகாட்டியிருந்தோம். அவை பெரும்பாலும் அப்படியே நடந்திருக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியினர் ஆளாளுக்கு ஒரு கருத்துச் சொன்னாலும் இறுதியில் இக்கட்டான நேரத்தில் ஒன்றாக இணைந்துவிடுவார்கள் என்றோம். அது நடந்திருக்கிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்று கூறியிருந்தோம், அதுவும் நடந்திருக்கிறது.

ஜனாதிபதிதான் தடுமாறிப் போயிருப்பார், எண்ணிக்கை ஓட்டத்துக்கு ஏற்ப முடிவு எடுப்பதை தவிர அவருக்கு வேறு வாய்ப்பில்லை என்று கூறியிருந்தோம்.

அதற்கு முன்னரும் அவர் அப்படி நடந்ததை குறிப்பிட்டிருந்தோம். அதுவும் அப்படியே நடந்தது.

ஆரம்பம் முதல் பிரதமர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி வந்த அவர், இறுதியில் எதுவும் செய்ய முடியாமல், தனது கட்சி உறுப்பினர்களே தனது கட்டுப்பாட்டில் இல்லாத நிலையில், "மனட்சாட்சிப்படி வாக்களியுங்கள்" என்று கூறினார். இதுதான் அவரது மிகப்பெரிய பலவீனம். தற்கால அரசியல் நிலைமை மாத்திரமல்லாமல், அவரது கட்சியும் அவரது கட்டுப்பாட்டில் இல்லை என்பதையே இது காட்டுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷவை பொறுத்தவரை இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் வெற்றி பெறுவது மிகக் கடினம் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். எது நடந்தாலும் லாபம் என்பதுதான் அவரது தற்போதைய நிலைப்பாடு.

தீர்மானம் வெற்றிபெற்றாலும் நல்லது, தோற்றாலும் அது நல்லதே என்பது அவரது கருத்து. பிரதமர் இந்த விடயத்தில் தற்போதைக்கு வெற்றிபெற்றாலும், இனியும் அவருக்கு இந்தக் கஷ்டங்கள் தொடரத்தான் போகின்றன. ராஜபக்ஷ அணியினரின் அழுத்தங்கள் அடுத்து வரும் ஆண்டுகள் மிகவும் கடினமாகவே இருக்கப் போகின்றன. ஆகவே சரியாக எதையும் செய்ய முடியாத அழுத்தத்தில் அடுத்த தேர்தலுக்கு முன்பாக பெயரைக் கெடுத்துக் கொள்ளப்போவதுதான் அவர் எதிர்நோக்கும் தற்போதைய சவால்.

இந்தச் சவாலை எப்படி எதிர்கொள்ளப்போகிறார் என்பதுதான் அவரது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்.

தமிழர் தரப்பை பொறுத்தவரை, சில விடயங்கள் தொடர்பில் சில உத்தரவாதங்களை வாங்கிக்கொண்டு பிரதமருக்கு ஆதரவு அளித்ததாக சில தகவல்கள் வெளியாகியுள்ளன. அப்படியான உத்தரவாதங்களை எந்த அளவுக்கு நிறைவேற்றிக் கொள்ளப்போகிறார்கள் என்பதிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைபின் எதிர்காலம் இருக்கிறது. இந்த விடயத்தில் நாம் த.தே.கூ கடந்த காலத்தில் விட்ட தவறுகளை விமர்சிக்கப் போவதில்லை. மாறாக இனிவரும் நாட்களில் தமக்கு கிடைத்த உத்தரவாதத்தை எவ்வாறு அவர்கள் பயன்படுத்தி, தமிழ் மக்களுக்கு நல்லதை சேர்த்துக்கொடுக்கப் போகிறார்கள் என்பதே இனி முக்கியம்.

மூன்றின் இரண்டு பங்கு பலம் இனி அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் இருக்குமா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ள நிலையில், அரசியலமைப்பு விவகாரத்துக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது சிரமமானதுதான். ஆனால், ஏனைய விடயங்களான, அரசியல் கைதிகள் விடுதலை, நிலவிடுவிப்பு, மக்களின் புனர்வாழ்வு அத்துடன் கிழக்கில் தமிழர்கள் எதிர்கொள்ளும் (கிழக்கு தமிழர் விவகாரம் உட்பட) பிரச்சினைகள் உட்பட துணைப் பிரச்சினைகளுக்காவது அந்தக்கட்சியால் ஏதாவது செய்ய முடிந்தால், அது சாதகம் தான்.

கடந்த அலைகள் ஓய்வதில்லை கட்டுரையில் சொன்னதுபோல, இப்போதும் நாம் சொல்லக்கூடியது பொதுமக்களுக்கு வேடிக்கை பார்ப்பதைவிட வேறு என்ன செய்ய முடியும்.

--- பூபாலரட்ணம் சீவகன்---

# "தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு ரணில் வழங்கிய வாக்குறுதிகள்"

நம்பிக்கையில்லா தீர்மான வாக்கெடுப்பின் போது அதனை எதிர்த்து வாக்களிப்பதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட 10 நிபந்தனைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளதாக கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் டெலோ அமைப்பு கூறியுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமருக்கு ஆதரவு வழங்குவதற்கு பதிலாகவே இந்த பத்து விடயங்களையும் ரணில் ஏற்றுக்கொண்டதாகவும், அந்தக் கட்சி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.



பிரதமரால் ஒப்புக்கொள்ளப்பட்டதாக டெலோ அறிவித்த விடயங்கள் பின்வருமாறு.

- வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு உடனடியாக அரசியல் தீர்வு காணுதல்.
- அடுத்த பொதுத்தேர்தலுக்கு முன்னதாக ஒரு புதிய அரசியலமைப்பை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுதல்.
- பொதுமக்களின் காணிகள் அனைத்திலும் இருந்து இராணுவத்தை வெளியேற்றுவதை உறுதி செய்தல்.
- அரசியல் கைதிகள் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கல்.
- போர்க்காலத்தில் காணாமல் போனவர்கள் குறித்து ஆராய்தல்.
- வடக்கு கிழக்கு மாகாண மக்களின் உரிமைகளை பாதுகாத்தல்.
- வடக்கு கிழக்கில் வாழும் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை உறுதி செய்தல்.
- வடக்கு கிழக்கில் தகுதியுள்ள ஆட்கள் இருக்கும் பட்சத்தில் வெளிமாகாணங்களை சேர்ந்தவர்களை அங்கு பணிக்கு அமர்த்துவதை தவிர்த்தல்.
- வடக்கு கிழக்கின் 8 மாவட்டங்களுக்கு தமிழ் பிரதேச செயலாலர்களை நியமித்தல்.
- மற்றும், வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது, அந்த மாகாண பிரதிநிதிகளின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளின் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்தல்.

# இலங்கையில் தமிழர் இருப்பும் சுயசார்புப் பொருளாதாரமும்

## தமிழரின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் திராணி எந்தக் கட்சிக்கும் கிடையாது

-- திருநாவுக்கரசு கோபகன் --

ஒரு இனத்தின் இருப்பை அதன் தனித்துவமான மொழி, பண்பாட்டு அடையாளங்கள், அதன் நிலத் தொடர்ச்சி என்பவற்றுடன் அவ்வினத்தின் சுயசார்பு பொருளாதாரக் கட்டமைப்பும் தீர்மானிக்கின்றது. தமிழினம் எவ்வாறு நீண்ட காலமாகத் தன் இருப்பை நிலை நிறுத்தப் போராடி வருகின்றதோ அதே போல இலங்கையின் ஏனைய இனங்களும் தமது இருப்பைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய மிக முக்கியமான தருணம் இது.



நாட்டின் தளர்வான பொருளாதாரக் கொள்கை, பல்தேசியக் கம்பனிகளின் முற்றுகை, உற்பத்திக் கொள்கையில் அரசின் உறுதியின்மை என்பன இலங்கைத் தீவை பொருளாதார ரீதியாக ஏனைய நாடுகளின் உதவியில் மிகவும் தங்கிநிற்கும் நிலைக்கு இட்டுச் சென்றிருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில் தமிழர் தமது சுய சார்புப் பொருளாதாரத்தை ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியுடன் சேர்த்து கட்டியெழுப்ப முடியுமா என்கிற கேள்வி நம்முன்னே எழுகிறது. ஒட்டுமொத்த நாட்டினதும் உற்பத்திப் பொருளாதாரம் சிதைவடைந்திருக்கின்ற காலகட்டத்தில் ஒரு தேசிய இனமாக நாம் தனித்துவமான பொருளாதார பாதையில் பயணித்தாக வேண்டிய தேவை முன்னெழுகின்றது.

யுத்தம் தந்த உயிர் பொருட் சேதங்களை விஞ்சாத இழப்பாக நம்மினம் தன்னுடைய விதைகளை இழந்ததை நாம் இங்கு ஞாபகமூட்டியாக வேண்டும். 70 களிலும் 80 களின் முற்பகுதியிலும் தமிழர் தரப்பு விவசாய உற்பத்தியில் காத்திரமான வளர்ச்சிப் போக்கை வெளிக்காட்டி இருந்தமையை நாம் அறிவோம். தன்னிறைவான விவசாய உற்பத்தியும் விதைக் களஞ்சியமும் தமிழர் தரப்பிடம் இருந்தன. தனித்துவமான காலநிலை மாற்றங்களுக்கு ஈடு கொடுத்து விளைச்சலைத் தரவல்ல இனங்களுக்குச் சொந்தக்காரர்களாக இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். நோயை எதிர்த்து நிற்பதற்கும் வறட்சியைத் தாங்கி நிற்கவுமாக இவ்வினங்கள் கூர்ப்படைந்திருந்தன. வருடம் முழுவதும் உணவுக்கான சேமிப்பாகவும் அடுத்த போகத்திற்கான விதையாகவும் விவசாயிகளிடம் விதைகள் செழித்திருந்தன. யுத்தமும் இடப்பெயர்வும் நம்மிடையே இருந்த அத்தனை வகையான உற்பத்தித் திறனையும் அழித்தொழித்து விட்டது. யுத்த மீள்வின் பின்பு அருந்தப்பாக எஞ்சியிருந்த விதைகளையும் பல்தேசியக் கம்பனிகள் சூழ்ச்சிகரமாக நம்மிடமிருந்து பறித்தெடுத்து அவர்களது மரபணு மாற்றப்பட்ட விதைகளை நம் முற்றத்திலே பாவனைக்கு தள்ளியிருக்கின்றன.

விதைகள் மீள் முளை திறனற்றவை, எனவே ஒவ்வொரு முறையும் விதைக்கும் போது அதனை நாம் கொள்வனவு செய்தாக வேண்டும், தாம் கை காட்டும் உரம் பாவித்தால் மட்டுமே விளைச்சல் அமோகமாகும், கிருமி நாசினிகள் தாம் சொல்பவையே என்று உற்பத்தியாளர்களாகவிருந்த நம்மையெல்லாம் வாங்குபவர்களாக மாற்றி பல்தேசியத்திடம் கையேந்த வேண்டிய நிலைக்கு தள்ளியிருக்கிறார்கள்.

இது ஏதோ தற்செயலாக நிகழ்ந்த ஒன்றன்று. மாறாக முறையான திட்டமிடலுடன் நீண்ட கால வேலைத் திட்டத்தினடிப்படையில் எம் பொருளாதாரத்தைத் தன்னிறைவு நிலையிலிருந்து தங்கியிருக்கும் நிலைக்கு மாற்றியிருக்கிறார்கள்.

விதைகளை மட்டுமே நம்மிடமிருந்து பிரித்தழித்திருக்கிறார்கள் என்றில்லை, பால் தரும் பசுக்கள் மாறிவிட்டன, ஆடுகள் மாறிவிட்டன, நாட்டுக் கோழியினங்கள் புரொய்லர்களாக மாற்றமடைந்துவிட்டன. ஒரு இனத்தினை அழிப்பதற்கு அவ்வினத்திற்கெதிராக ஒரு கட்டாய இனவழிப்பைத்தான் மேற்கொள்ள வேண்டும் என்றில்லை, மாறாக அதன் சுயசார்புப் பொருளாதாரக் கட்டமைப்பைச் சிதைப்பதன் மூலமாக அதனை சிறப்பாக செய்து விடமுடியும்.

கடல்வள அழுத்தம்

-------------------------

மறுபுறம் இந்திய மீனவர்களின் அத்து மீறிய மீன்பிடி ஆக்கிரமிப்பும் தென்பகுதி மீனவர்களின் ஆக்கிரமிப்புமாக இரு பக்க நெருக்குவாரங்களைத் தமிழ் மீனவர்கள் எதிர்கொள்கின்றனர். அடிப்படைத் தொழில் முயற்சிகள் தோல்வியடைகின்ற

**புலம்பெயர் உறவுகளின் உதவிகள் இதற்கு தேவை**


சூழலில் வேலைக்கென வெளிநாடுகளை நோக்கிப் படையெடுக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை கிழக்கில் பலமடங்கு அதிகம். உற்பத்திப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் அதனூடான உள்ளூர் வேலைவாய்ப்புக்களை உருவாக்கவும் கூடிய வாய்ப்புக்கள் மேற்படி காரணிகளால் இல்லாமல் அழிக்கப்படுகின்றன. தன் கால்களிலே நின்ற ஒரு இனத்தின் ஒட்டுமொத்த உற்பத்தித் திறனும் வளைகுடா நாட்டின் பாலைவனங்களில் சருகாவதை நாம் மௌன சாட்சிகளாகப் பார்த்து விட்டு நகருகின்றோம்.

நம்மை இனஅழிப்பின் எச்சங்களிலிருந்து மீளக் கட்டமைக்கும் இனமாக தகவமைத்துக் கொள்வதன் அடுத்த படிநிலையாக நமக்கான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய மிக முக்கியமான தருணம் இதுவாகும். எனவே அதனை எவ்விதமாக

**தமிழர் சிந்தனைச் சமூகம் விவாதங்களைத் தொடங்க வேண்டிய நேரம் இது**

கட்டியெழுப்பப் போகின்றோம் என்பது பற்றி தமிழர் சிந்தனைச் சமூகம் விவாதங்களைத் தொடங்க வேண்டிய நேரம் இது. தற்போதைய தமிழர் அரசியல் தளங்களிலே பயணிக்கும் எந்தக் கட்சியும் இதுவரையில் தமிழரின் பொருளாதாரக் கட்டமைப்பை எவ்விதம் அடுத்த நிலைக்கு நகர்த்துவது என்ற பொருள்ப்பட பேசினார்களில்லை, இனியும் பேசும் திராணி அவர்களிடம் இருப்பதாகத் தோன்றவில்லை.

எங்கேனும் எஞ்சிக் கிடக்கும் சாத்தியமுள்ள விதைகளைக் கண்டெடுத்து உற்பத்தி செய்யவும் இளைஞர்களை மீளவும் விவசாயத்தின்பால் இழுத்துவரவுமான வேலைத்திட்டங்களைத் தொடங்கியாக வேண்டும். கிராமங்கள் தோறும் சமூகங்கள் நிர்வகிக்கும் கூட்டுப் பண்ணைத் திட்டங்களை அறிமுகஞ் செய்தாக வேண்டும். நிர்வாக ரீதியாகத் தமிழர் அரசாளும் பகுதிகளிலிருந்து நீண்ட காலக் குத்தகையடிப்படையில் நிலங்களைப் பெற்று அதனை ஒருங்கிணைந்த பண்ணைகளாக உருவாக்குதல் வேண்டும். நஞ்சற்ற விவசாய உற்பத்தியை நோக்கி தமிழர் தரப்பு நகர வேண்டிய நேரம் இது. நம்மைச் சுற்றிப் பல்தேசியக் கம்பனிகள் விரித்து வைத்துள்ள நச்சு உணவு என்கிற கோட்டையை உடைத்து பாரம்பரிய நஞ்சற்ற உணவை எம்மிடையே அறிமுகஞ் செய்தாக வேண்டும். தமிழர் அரசியல் தலைமைகள் இது தொடர்பாக கூடிய கவனஞ் செலுத்துதல் வேண்டும். புலம் பெயர் உறவுகள் தமது முதலீடுகளை தமிழர் தாயகத்தில் உணவு உற்பத்தியில் முதலிடுவதனூடாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான தொழில் வாய்ப்பையும் ஊக்கப்படுத்த வேண்டும். இளைஞர்களை ஊக்கப்படுத்துவதனூடாக அடுத்த சந்ததியைச் சொந்தக்காலில் நிற்பவர்களாக மாற்றியமைக்க வேண்டும். உதவிகளுக்காகச் கையேந்த யோசிக்கும் தமிழர் சமூகத்தை மீளத்தூக்கிவிட இதனைவிடப் பொருத்தமான தருணம் ஒன்று புலம்பெயர் உறவுகளுக்கு கிடைக்காது.



கேட்டதெல்லாம் நான் தருவேன் என்னை நீ மறக்காதே..
காலமெல்லாம் நான் வருவேன் என்னை நீ மறக்காதே..

## ஐ.தே.கவில் மறுசீரமைப்புக்காக கபீர் ஹாசிம் பதவியை இராஜினாமா செய்தார்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வியடைந்த நிலையோடு, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை இராஜினாமா செய்வதாக அமைச்சர் கபீர் ஹாசிம் கூறியுள்ளார்.

கட்சியில் துரித மாற்றங்களைச் செய்வதற்கு ஏதுவாகவே தான் தனது இராஜினாமாக் கடிதத்தைப் பிரதமரிடம் கையளிக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதம் நிறைவடைந்த பின்னர் விரைவாகக் கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க முன்னதாக கூறியிருந்தார்.


அதன்படி இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னதாக கட்சியின் மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக இம்மாதம் 07 மற்றும் 08ஆம் திகதிகளில் அந்தக் கட்சியின் மத்திய குழுவின் சிறப்புக் கூட்டம் ஒன்றும் நடக்கவுள்ளது.



# தந்தை செல்வா அவர்களின்: 120ஆவது பிறந்த தினத்தை முன்னிட்ட அவரது கடைசிப் பேச்சு

## (எஸ். ஜே.வி. செல்வநாயகம் – 31 மார்ச் 1898 – 26 ஏப்ரல் 1977)

--- மாலி என்ற மகாலிங்கசிவம் ---
நன்றி : ஷஈழநாடு; - வாரமலர் (22.05.1977)



“நேற்று நான் பேசும்போது நீர் இருந்தீரா?” பெரியவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் கேட்டார்.
“ஓம், சேர்” என்றேன்.
“நான் பேசியது துலாம்பரமாக கேட்டதா?”
“ஓம், சேர். தெளிவாக கேட்டது.” - நான் சொன்னேன்.
“சிலவேளைகளில் நான் பேசுவது தெளிவாக கேட்காது.” - அவர் சொன்னார்.
“இது தெளிவாக கேட்டது. எல்லோரும் உங்கள் பேச்சை உன்னிப்பாக கேட்டார்கள்.” - நான் சொன்னேன்.
“நானும் கவனித்தனான்; நான் பேசும்போது ஜே. ஆர். எல்லோரும் ‘இயர் போனை’ எடுத்து நான் பேசுவதைக் கேட்டார்கள்.” - அவர் சொன்னார்.
- எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது, இவற்றையெல்லாம் அவர் அவதானித்திருக்கிறாரே என்பதை நினைக்க.

**தந்தை செல்வநாயகம் ஷமுழங்கினார்; என்று சொன்னால் பலருக்கு அது ஒருமாதிரியாகவே இருக்கும்.**

“நான் பேசியது சரிதானே, நான் இரண்டு பிரதமர்களுடனும் ஒப்பந்தம் செய்திருக்கிறேன்; அப்படியிருக்க, டயஸ் பண்டாரநாயக்க நான் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை என்று கூறுவது பிழை” என்றார் தந்தை செல்வநாயகம். அவருடைய பேச்சிலும் கிரகிப்பிலும் அவர் கொண்டிருந்த நிதானத்தை உணர்ந்து கொள்ளமுடிந்தது.

1976 நவம்பர் 19ஆம் தேதி பாராளுமன்றத்தில் அவருடைய கடைசி உரையை அவர் ஆற்றியிருந்த மறுநாள், கொள்ளுப்பிட்டி, அல்பிரட் ஹவுஸ் கார்டனில் அவருடைய இல்லத்தில் என்னைக் கண்டதும் என்னை அழைத்து ஒரு ‘குழந்தை’போல பேசினார் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம்.

தேசிய அரசுப் பேரவை விவாதங்களின்போது கிரமமாக - தவறாது பங்குபற்றுவார்; அதில் மிகுந்த அக்கறை கொண்டவர் தந்தை செல்வநாயகம். உரிய நேரத்தே, பிந்தாமல் சென்றுவிடவேண்டும் என்பதிலும் அக்கறையுள்ளவர்.
ஒருமுறை, காரை அவருடைய மகன் கொண்டு சென்றுவிட்டார். பிற்பகல் 2 மணியாகிவிட்டது; கார் வந்து சேரவில்லை. அன்று பேரவை அமர்வு பி.ப. 2 மணிக்கு. கையில் ‘பைலு’டன் காருக்காக காத்திருந்தார் தந்தை. ‘கார் வந்ததும் போவோம்’ என்று கூறிவிட்டு, அவரின் காரியதரிசி ஏதோ அலுவலில் உள்ளே இருந்துவிட்டார். சிறிதுநேரம் கழிந்துவிட்டபோது, பெரியவரை அங்கு காணவில்லை. பதற்றத்தோடு சென்று பார்த்ததில், கையில் ‘பைலு’டன் வீதியில் மெள்ளமெள்ள நடந்துகொண்டிருந்தார். ஓடிச்சென்று கேட்டபோது, ‘பஸ்’ஸில் போகப்போகிறேன்’ என்று கூறினாராம். காரியதரிசி திரு. இராஜேந்திரம் ஒருமுறை கூறினார்.

எதிர்க்கட்சி ‘லொபி’ பக்கமுள்ள பலமான அந்தக் கதவுகளை தன்னுடைய நலிந்த கைகளால் தள்ளி திறந்து, பேரவையினுள் நுழைவார் தந்தை செல்வநாயகம். நுழைந்ததும், வாசலருகிலேயே நின்று சிறிதுநேரம் வலது, இடது பக்கங்களுக்கு திரும்பி, வந்திருப்பவர்கள் மீது ஒரு நோட்டம் விடுவார்.
பின்னர், இடதுகையில் ‘பைலை’ உடம்போடு அணைத்துக்கொண்டு, வலதுகையால் ஆசனங்களைப் பிடித்தபடி, படிக்கட்டுகளாக அமைந்த பேரவை மண்டபத்தினுள் ஒவ்வொரு படியாக தாண்டி, ஒவ்வொரு படிக்கட்டுகளைத் தாண்டும்போதும், அந்தந்த வரிசையில் இருப்பவர்களை இருபுறமும் திரும்பி அவதானித்தபடி, முன்வரிசையிலுள்ள தனது ஆசனத்தை அடைவார்.

சில சமயங்களில் தமிழரசுக் கட்சி எம். பிக்கள் மாத்திரமல்ல, எக் கட்சியைச் சார்ந்தவருமே அவரைப் பிடித்துச் சென்று, அவருக்கு உதவுவார்கள். ஆனால், இதை அவர் அவ்வளவாக விரும்புவதில்லை.

ஆசனத்தில் அவர் அமர்ந்ததும் பேரவைச் சேவகர்கள் ஆசனத்திலுள்ள ‘இயர்போனை’ அவரது காதுகளில் இணைத்துச் செல்வார்கள். இத்தனைக்கும், 10 நிமிடங்களுக்குமேல் ஆகிவிடும். பார்வையாளர் கலரியில் அத்தனை கண்களும் இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கும்.

ஆசனத்தில் அமர்ந்ததும் அங்கு வைக்கப்பட்டுள்ள அறிக்கைகளையெல்லாம் அவதானமாக வாசிப்பார். பேச்சுக்களை உன்னிப்பாக கேட்பார். பேரவைச் செயலாளர்களோடு எதாவது பேசுவதற்காக எழுந்து அவர்களை நோக்கிச் சென்றால், அவர்கள் தாங்களே உடனே எழுந்துசென்று அவரிடம் விடயத்தைக் கேட்பார்கள்.

**ஷசாத்வீகமான முறையிலேயே போராடுவோம். இந்த நாட்டில் நாம் உரிமைபெறுவோம்ளு அல்லது, அழிந்துபோவோம்**

அமரர் திருச்செல்வத்தின் அநுதாபத் தீர்மானம்மீது பேசிய பேச்சுத்தான் பேரவையில் தந்தை செல்வநாயகத்தின் கடைசிப் பேச்சு. ஆனால், பேரவையில் அவரது கடைசி அரசியல் பேச்சு அதற்கு முன்னதாக கடந்த நவம்பர் 19ஆம் தேதி இடம்பெற்றது. இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட விவாதம் பேரவையில் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, அந்த விவாதத்தில் அன்று அவர் பேசினார். அவர் பேசவில்லை; முழங்கினார்!

தந்தை செல்வநாயகம் ‘முழங்கினார்’ என்று சொன்னால் பலருக்கு அது ஒருமாதிரியாகவே இருக்கும். அவர் பேசுவதே கேட்காதே; அப்படியிருக்க, அவர் ‘முழங்கினார்’ என்றால்...? என்று எண்ணவே தோற்றும். அன்றும் அவர் மெதுவாகத்தான் பேசினார். ஆனால், அந்தப் பேச்சு அரசுக்கு ஒரு கலக்கமாக-இடியாக-முழக்கமாகத்தான் இருந்தது.



**வாசுதேவ நாணயக்கார மலர் வளையம் ஒன்றைச் சபையினுள் வைத்துவிட்டு வெளியேறினார்.**

தமிழரசுக் கட்சியின் தரப்பில் கடைசி உரையை, விவாதத்தின் இரண்டாவது வாசிப்பின் வாக்கெடுப்புத் தினமான அன்று, சுமார் 40 நிமிடங்களுக்கு மேலாக, தந்தை செல்வநாயகம் நிகழ்த்தினார்.
தந்தை செல்வநாயகம் பேச எழுந்ததுமே அரசு, எதிர்க்கட்சி இருதரப்பிலும் அனைவருமே தங்கள் ‘இயர்போன்’களை மாட்டிக்கொண்டு, அவதானமாக கேட்க ஆயத்தமானார்கள்.

கைகள் இரண்டையும் இடுப்பில்வைத்தபடி, சபாநாயகரை நோக்கி மிகுந்த உசாராகவே அன்று பேசினார். அவருடைய நிலை; பேச்சு இரண்டுமே அன்று மிடுக்காகத்தான் இருந்தன.



‘இந்த நாட்டில் மக்களின் ஆதரவைப் பெற்றிருந்த இரண்டு பிரதமர்களுடனும் தமிழர் பிரச்சினை குறித்து ஒப்பந்தம் செய்தேன்; ஆனால், அவர்கள் இருவருமே பின்னர் சிங்கள மக்களுக்குப் பயந்து அவ்வொப்பந்தங்களை நிறைவேற்றவில்லை. இந்நிலையில், சமஷ்டி கோரிய நாம், அக் கொள்கையினைக் கைவிட்டு, அடுத்த நிலை பற்றி நிதானமாக யோசித்தோம். தனிநாடு ஒன்றுதான் எமக்குள்ள ஒரேவழி என்ற முடிவுக்கு வந்தோம். தனிநாடு அமைப்பதென்பது சுலபமானதொன்றல்ல என்பது எமக்குத் தெரியும். எனினும், இந்த நாட்டில் நாம் சிங்கள மக்களின் பிடியிலிருந்து விடுபடவேண்டும்; அல்லது, அழிந்துபோகவேண்டும்.

‘நமது முதாதையர் புத்திசாலிகளாக இருந்தனர். தமக்கென்று ஒரு நாட்டை அவர்கள் வைத்திருந்தார்கள்.

‘நாம் பிரிந்துபோவதை இந்த அரசாங்கம் ஏன் மறுக்கிறது என்பது தெரியவில்லை. இந்த அரசாங்கம் மறுத்தாலும் இனி வரப்போகின்ற ஒரு சிங்கள அரசாங்கம் எமது நாட்டைப் பிரித்துத் தரும். அயர்லாந்து நூறு வருடங்களுக்குமேல் போராடி பிரிந்து சென்றது. நாம் எமது முடிவை உலகநாடுகளுக்கு அறிவித்துவிட்டோம். எமது கோரிக்கைகளை அவை ஏற்றுக்கொள்ளும்.

‘சாத்விகமான முறையிலேயே போராடுவோம். இந்த நாட்டில் நாம் உரிமைபெறுவோம்; அல்லது, அழிந்துபோவோம். இந்தப் பின்னணியில்தான் எமது கொள்கை இருக்கின்றது. எங்கள் எதிர்காலம் எங்கள் சிந்தனையிலேயே தங்கியிருக்கிறது.’ - தந்தை செல்வநாயகத்தின் பேச்சின் சாரம் இப்படித்தான் இருந்தது.

தந்தை செல்வநாயகத்துக்குப் பின்னர் அக்குரணைத் தொகுதி உறுப்பினர் ஏ. சி. எஸ். ஹமீட் (ஐ. தே. க.) அடுத்து, உப சபாநாயகர் ஜனாப் ஐ. ஏ. காதர் பேசினார்.
திரு செல்வநாயகம் நாட்டைப் பிரிக்கும் ஓர் அறைகூவலைப் பேரவையில் விடுத்துவிட்ட பின்னர், அவரையடுத்துப் பேசிய அக்குரணை உறுப்பினர் அதுபற்றிக் கண்டிக்காது கண்டிக்கப்படவேண்டிய விடயம் என்றும், நாட்டைப் பிரிக்க ஒருபோதும் நாம் விடப்போவதில்லை என்று உப சபாநாயகர் ஆவேசத்தோடு பேசினார்.

தந்தை செல்வநாயகம் பேரவையில் இப்படிப் பேசிவிட்டாரென்பதை அறிந்ததும் அவருக்கு அரசாங்கம் என்ன பதில் அளிக்கப்போகிறது என்பதை அறிவதற்காக சகல உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்களும் பத்திரிகை நிருபர்கள் கலரியை ஆக்கிரமித்துக்கொண்டார்கள்.

எனினும், அன்றுதான் ஜப்பான் சென்று திரும்பிய பிரதமருக்கு (திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க) பேரதனை வளாகச் சம்பவம் தொடர்பான பொலிஸ் அட்டூழியங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக அவர் சபையுள் பிரவேசித்ததும், எதிர்க்கட்சியினர் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர். கிரியல்ல எம். பி. திரு. வாசுதேவ நாணயக்கார மலர் வளையம் ஒன்றைச் சபையினுள் வைத்துவிட்டு வெளியேறினார்.

- இந்த அமளிதுமளிகளில் அரசாங்கம் தந்தை செல்வநாயகத்தின் பேச்சுக்கு அன்று பதிலளிக்கவில்லை. ‘நாட்டில் மொழிப் பிரச்னை இருக்கிறது’ என்று மாத்திரம் பிரதமர் சொன்ன நீதி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க, அதற்கு தமிழ்த் தலைவர்களையும் குற்றம் சொன்னார்.

‘நான் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை என்று டயஸ் பண்டாரநாயக்க கூறுவது பிழை’ என்று, மறுநாள் தந்தை செல்வநாயகம் என்னிடம் சொன்னது இதைத்தான்.



# 40 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் களரி கண்ட ஒரு கூத்து

-- யோகநாதன் ஜகேன் --

## கலைஞர்களின் உயிர் பலியானதால் அது நிறுத்தப்பட்டிருந்தது





எண்ணில் அடங்காத நம்பிக்கைகளும் பண்பாடுகளும் காலவோட்டத்தில் தூரச்சென்று மறைந்துபோகின்றன. வாழ்தலுக்கும் வளம் பெறுதலுக்கும் ஒவ்வாத நிகழ்வுகழுக்கு பல்தேசியகம்பனிகள் அனுசரணை வழங்கி பிரமாண்டங்களையும் புதுமையான உணர்வுக் கிளர்ச்சிகளையும் ஏற்படுத்தி சமூகத்தை வாரியெடுத்து தனது கைக்குள் போட்டுக்கொள்கின்றன. கூலிக்கும், அனுசரணைக்கும் கலைகள் கதைசொல்லும் இக்காலத்தில் ஆங்காங்கே உள்ளூரில் உரிமக்கலைக்காக உணர்வுசார்ந்து கலைஞர்களும் இளைஞர்களும் போராடுகின்றனர். சமூக நோக்குடனான இளைஞர்களின் இப்பார்வை ஓரளவு கலை ஆர்வலர்களுக்கு நம்பிக்கை கொடுக்கின்றது.

கடந்த வெள்ளிகிழமை படையாண்டவெளி என்றுமில்லாதவாறு விழாக்கோலம் பூண்டிருந்தது. ஸ்ரீ நரசிங்கவைரவர் ஆலயமுன்றல் களைபெற்றிருந்தது. நாடக ஆற்றுகைக்காரர்களும் அண்ணாவிமார்களும் கலை



ஆர்வலர்களும் அயலில் வாழும் நலன்விரும்பிகளும் அந்தக் கிராமத்தை நோக்கிப் பயணப்பட்டனர். மறைந்துபோன பொக்கிஷம் ஒன்று மீண்டும் கிடைத்தது போன்று ஊர் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியது. கூடவே ஒருவகைத் தயக்கமும் அவர்களை ஆட்கொண்டிருந்தது. உயிர்களை காவுவாங்கிய கூத்து ஒன்று நாற்பது ஆண்டுகளின் பின்னர் மீண்டும் அந்தக்கிராமத்தில் ஆற்றுகை செய்யப்படுகின்றது என்ற செய்தி எங்கும் பரவியது. உள்ளூரில் கூத்துகாரர்களும் முதியவர்களும் உயிரைக்காவுவாங்கியது என்று தாம் நம்பும் கூத்தின் கதையை இளந்தலைமுறையினருக்கு கூறினார்கள்.

1978இல் "வாழபீமன் நாடகம்" எனும் தென்மோடிக்கூத்து படையாண்டவெளி கிராம உள்ளூர் கலைஞர்களால் உருவாக்கி ஆற்றுகை செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து, அழைப்பின் பெயரில் வடக்கிலங்கையில் அது ஆடப்பட்டது. அவ்வாறு வவுனியாவில் ஆடிவிட்டு ஊர்திரும்பிய கலைஞர்கள் வாகனவிபத்தொன்றில் சிக்கினர். அந்த விபத்தில் இரண்டு கலைஞர்களை அந்தக்கிராமம் இழந்தது.

அன்றிலிருந்து வாழபீமன் கூத்தை யாரும் ஆடத்தயாரில்லை. வாழபீமன்கூத்து உயிர்ப்பலிகொள்ளும் கூத்தாக ஊர்வாசிகளால் நம்பப்பட்டது.

அதற்கு முன்னரும் அதே கிராமத்தில் பகாசுரன் வேடமணிந்து ஆடிய ஒரு கலைஞர் கூத்தை ஆடிக்கொண்டிருந்தபோது மரணமாகியிருக்கிறார். அதுவும் இவர்களின் மனதில் நெருடலாக இருக்கவே, 78 இல் நடந்த விபத்து பெரும் பயமாக கிராம மக்கள் மனதில் உருவெடுத்துவிட்டது.

கிராமத்தின் ஸ்ரீ நரசிங்கவைரவரின் சடங்கின் இறுதி நாளன்று மாருதம் கலைக்கழகத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டும் கூத்து ஒன்றை ஆடுவதற்கான திட்டமிடல் கலந்துரையாடலொன்று நடந்தது. அதில் இந்த வாழபீமன் கூத்து பற்றிய முன்மொழியப்பட்டபோது, மாருதம் கலைக்கழகத்தினர், அதனை ஏற்று, தற்போது இக்கூத்து அரங்கேற்றப்பட்டது.

பாரம்பரிய முறையில் அமைக்கப்பட்ட கூத்துக்களரி ஆலயத்தின் முன்பாக விளைந்து, அறுவடை செய்யப்பட்ட வயல்வெளியின் நடுவே மின்விளக்குகளுடன் பிரகாசித்தது. மாருதம் கலைக்கழகத்தித்தின் வரவேற்புடனும் விருந்தினர்களின் உரையுடனும் ஆரம்பமாகிய கூத்து ஆலயபக்தர்கள் பார்வையாளர்கள் என அனைவரையும் ஈர்த்தது.

40 வருடங்களுக்கு பின்னர் ஒரு கூத்து மீண்டும் ஆடப்படுகிறது என்பது ஒரு சாதாரணமான விடயமல்ல. கூத்து ஆடப்படுவதற்கு முன்னதாக அங்கிருந்த மக்கள் தமது பாரம்பரிய கூத்து ஆற்றுகையுடன் தொடர்புபட்ட பல சாதக பாதக அம்சங்களை நினைவு கூர்ந்திருக்கிறார்கள்.

அங்கு கிழக்கு பல்கலைக்கழகத்தின் விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சி. ஜெய்சங்கரும் சமூகமளித்திருந்தார். 40 வருடங்களுக்கு பின்னர் பலவிதமான மனத்தடைகளுக்கு மத்தியிலும், இந்த கூத்தை அவர்கள் மீண்டும் ஆட முயற்சித்திருப்பது, சமூக, பண்பாட்டு, வரலாற்று ரீதியில் அவர்களுக்கு இருக்கக்கூடிய ஒரு தேவையை காண்பிக்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

அன்றைய தினம், 40 வருடங்களுக்கு முன்னதாக கூத்தை ஆடிக்கொண்டிருந்துபோது களரியிலேயே மரணித்த கூத்துக்கலைஞரின் மனைவி அழைக்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டுள்ளார். அதேபோல, மதவாச்சி விபத்தில் பலியான கிராமத்தின் இரு மூத்த கலைஞர்களும் நினைவு கூரப்பட்டனர்.

இவை அவர்கள் தமது பாரம்பரியம் நீடித்திருக்கச் செய்வதற்கான ஒரு அக்கறையை கொண்டிருப்பதை உணர்த்துகிறது என்றும் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

கிழக்கின் ஒவ்வொரு கிராமமும், பலவிதமான கூத்துக்களை தொடர்ச்சியாக ஆடிவரும் பாரம்பரியத்தை கொண்ட கலை ஊற்றுக்கள். அதேவேளை, பயங்கலந்த சில நம்பிக்கைகள் பொதுவாகவே கிராமங்களில் புரையோடிப்போயிருப்பவை. இங்கு இந்த மக்கள் தமது ஒரு கலைவடிவத்தை மேடையேற்றுவதன் மூலம் தமது சில பயங்களை வெற்றிகொள்ள முயற்சித்திருக்கிறார்கள்.


# நூறு கடந்தால் ஐயாயிரம்

நூறுவயதைக் கடந்தால் உங்களுக்கு மேலதிகமாக 5000 ரூபாய்கள் கொடுப்பனவு கிடைக்கும். இது வேறு எங்குமல்ல, இலங்கையில்தான்.

இலங்கையில் உள்ள நூறு வயதைக் கடந்த வயோதிபர்களுக்கு சிறப்பு ஊக்கத்தொகை ஒன்றை வழங்கப் போவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.
இலங்கை ஒரு குட்டித்தீவுதான். ஆனால் இங்கு நூறு வயதைக் கடந்தவர்கள் சுமார் 250 பேர் இருப்பதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

இவர்களது வாழ்க்கைப் பாதுகாப்பு, மற்றும் ஏனைய நலன்களை உறுதி செய்யும் வகையில் 100 வயதைக் கடந்த அனைத்து இலங்கை பிரஜைகளுக்கும் மாதாந்தம் இலங்கை ரூபாய் 5000 ஐ வழங்க இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதற்கான அமைச்சரவை தீர்மானம் ஒன்றை இலங்கை அரசாங்கம்





நிறைவேற்றியுள்ளது. சமூகவலுவூட்டல், நலனோம்பல் மற்றும் மலைநாட்டு உரிமைகள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட இதுகுறித்த பரிந்துரையை இலங்கை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது.



# பன்சேனையை நாடு பேச வைத்த சாதனைப் பெண்கள்!

# கடுக்காமுனையைத் திரும்பிப் பார்க்கசெய்த கால்பந்து மங்கையர்!

-- படுவான் பாலகன் --



## வளமின்றி, மன உறுதியால் சாதித்த மங்கையர்கள் வரலாற்று பதிவானர்கள்

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய மாணவிகள் தாமும் சாதனை வீராங்கனைகள்தான் என்பதனைச் சாதித்துக் காட்டி நிற்கின்றார்கள். பன்சேனை பாரி வித்தியாலயமும், கடுக்காமுனை வாணி வித்தியாலயமும் இந்தச் சாதனைக்கு காரணம். பெண்களினால்தான் இரு பாடசாலைகளும் பெருமைபெற்றும் இருக்கின்றன. வயல்வெளிகளும், காடுகளும் ஆங்காங்கு மேட்டுநிலப்பகுதிகளில் வீடுகளையும் கொண்டமைந்த இப்பகுதியில், பன்சேனை பாரி வித்தியாலயம் அமைந்துள்ளது. "5 கிலோ மீற்றர், 4 கிலோமீற்றர், 3 கிலோமீற்றர் என்று கிலோமீற்றர் கணக்கான தூரத்தில் இருந்து, நடையிலும், துவிச்சக்கர வண்டியிலுமாக இப்பாடசாலைக்கு மாணவர்கள் வருகிறார்கள்" என்கிறார் அதிபர் செல்வராசா ஜமுனாகரன்.
இப்படி வருபவர்களும் வறுமைக்கோட்டில் வாழ்பவர்களாகவே உள்ளனர். இன்று பலரும் இவர்களைப் பற்றி கதைக்கத் தொடங்கிவிட்டனர். ஏன் தெரியுமா? கடந்த ஆண்டுகளில் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் கிழக்கு மாகாண மட்டத்தில் பன்சேனை பாரி வித்தியாலயம் முதலிடம்.! 100 மீற்றர், 400 மீற்றர், 800 மீற்றர், 1500 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் கோட்ட, வலய மட்டங்களில் பன்சேனை பாரி வித்தியாலயம் முதலிடம்! மாகாணமட்ட போட்டியிலும் வெற்றி பெற்றிருக்கின்றனர்.! உடல்வலுவை மட்டும் பயன்படுத்திச் செய்யும் விளையாட்டுக்கும் நல்ல பயிற்சி வேண்டும். பாடசாலையில் பயிற்சி வசதி எந்தளவுக்கு உள்ளது என உடற்பயிற்சி ஆசிரியரிடம் வினாவினோம். "காலை மாலை என இருநேரங்களுமே பயிற்சி செய்வதற்கான உகந்த நேரமாக கொள்ளப்படுகின்றது. ஆனால் இந்த நேரங்களில் மாணவர்கள் வரமாட்டார்கள். கிடைக்கும் நேரத்தினைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் பயிற்சியினை வழங்கிக் கொண்டிருக்கின்றேன்." என்கிறார் அவர்.



அது மட்டுமல்லாமல் மாணவர்கள் காலை மாலை வருகைதர முடியாததற்கான காரணத்தையும் உடற்பயிற்சி ஆசிரியர் தேவப்போடி பவளசிங்கம் குறிப்பிட்டார்.

"இங்கு யானை நடமாட்டம் உண்டு. மாணவர்கள் வெகு தூரங்களில் இருந்து வருவதால் நேரத்திற்கு எழுந்து வருவதோ அதேபோல பாடசாலையிலிருந்து 4 மணிக்குப் பிற்பாடு வீட்டுக்குச் செல்வதோ அவர்களால் முடியாது. யானைக்குப் பயம்" என்கிறார்.
"கிடைக்கும் நேரத்தில் கூட பயிற்சியை ஒழுங்காக வழங்கமுடியாது. இந்த மாணவர்களின் வறுமை அவர்களுக்கான உணவை இரண்டு நேரமாகக் குறைந்துள்ளது. அதிலும் அவை சத்தான உணவுகளே அல்ல. ஒரேமாதிரியான உணவைத்தான் அவர்கள் தொடர்ந்து உண்கின்றனர். இதனால் உடல் வலுவும் போதுமானதாக இல்லை." இவ்வளவு பிரச்சினைகள் இருந்தும் கடந்த வருடம் பன்சேனை பாரி வித்தியாலயம் விளையாட்டுப் போட்டிகளில் 06 தங்கம், 01 வெள்ளி, 01 வெண்கல பதங்கங்களைப் பெற்றுள்ளது.

"பாடசாலையில் எனது ஆசிரியரிடம் ஓட்ட நுட்பங்களைப் பெற்றாலும் பயிற்சி என்னவோ எனது பயத்தினால் வந்தது. எனது வீட்டுக்கும் பன்சேனை பாரி வித்தியாலயத்திற்கும் உள்ள தூரம் 5 கிலோ மீற்றருக்கு மேலாக



இருக்கும். சைக்கிளில் அல்லது நடையில் செல்வேன். நடந்து செல்வதென்றால் ஓடியே செல்வேன். அதேபோல யானைப் பயத்திலையும், மாடு துரத்தும் போதும் பயத்தினால் மிக வேகமாக ஓடுவேன். இவைதான் எனது ஓட்டப்பயிற்சியாக அமைந்தன." என்கிறார் மாகாண மட்டத்தில் 3 தங்கப் பதக்கங்களுக்கு சொந்தக்காரியான பாக்கியராசா வசந்தினி. இவர் கடந்த வருடம் 400 மீற்றர், 800 மீற்றர், 1500 மீற்றர் ஓட்டங்கள் (முதல் இடம்) உதைபந்தாட்டம், அஞ்சல் ஓட்டம் என அனைத்திலும் வெற்றி பெற்றவர்.

குடும்பத்தில் எட்டுப்பிள்ளைகளில் ஏழாவது பிள்ளையான இவர் தனது குடும்பத்தினரும் ஓரளவு ஒத்துழைப்பு நல்குவதாகக் குறிப்பிடுகிறார். வருங்காலத்தில் தேசிய மட்டத்தில் முதலிடங்களைப் பெறுவேன் என நம்பிக்கையுடன் குறிப்பிடும் இவர் தான் ஒரு சிறந்த உடற்பயிற்சி ஆசிரியராக வரவேண்டும் என்பதே தனது விருப்பு என்றும் கூறுகிறார். கடந்த வருடத்தோடு சாதனையை முடித்து வைக்கவில்லை. இந்த வருடமும் சாதனை வீராங்கனைகளாக மாறியிருக்கின்றனர். கிரீடா சக்தி எனும் தொனிப்பொருளில் அகில இலங்கை ரீதியாக அண்மையில் விளையாட்டுத் துறை அமைச்சினால் நடாத்தப்பட்ட காற்பந்தாட்டப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டப் பெண்கள் அணியினர் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளனர். இப்போட்டியில் கலந்து கொண்டிருந்தவர்கள் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பன்சேனை பாரி வித்தியாலய மாணவிகளும், கடுக்காமுனை வாணி வித்தியாலய மாணவிகளுமாவர். லீக் முறையில் நடாத்தப்பட்ட இப்போட்டியில், ஏ குழுவில் நான்கு அணிகளையும் வெற்றி கொண்ட மட்டக்களப்பு பன்சேனை அணியினர், வீ பிரிவின் களுத்துறை அணியுடன் நடைபெற்ற அரையிறுதி போட்டியிலும் வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் கொழும்பு மாவட்ட அணியுடன் மோதி, தண்டனை உதைமூலம் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டு, சாதனையை நிலைநாட்டியுள்ளனர். இப்போட்டியில் பங்கேற்றிருந்த மட்டக்களப்பு மாவட்ட அணியின் 8பேர் தேசிய அணிக்குத் தெரிவாகி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை இப்போட்டியில் பங்கேற்றிருந்த மட்டக்களப்பு அணி வீராங்கனை பா.வசந்தினி மொத்தமாக எட்டுக் கோள்களை போட்டுச் சாதனையை நிலைநாட்டியிருக்கின்றார்.
பன்சேனை பாரி வித்தியாலயத்தினைப் போன்று சாதனைப் பாடசாலையாக கடுக்காமுனை வாணி வித்தியாலயமும் திகழ்கின்றது. பெண்களுக்கான உதைப்பந்தாட்டப் போட்டியில் மாகாணமட்டத்தில் முதலிடத்தினையும், தேசிய மட்டத்தில் இரண்டாம் இடங்களையும் பெற்ற வரலாறுகளும் பதிவாகியுள்ளன. 2010ஆம் ஆண்டு தொடக்கம் 2017வரை பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் சாதனையை நிலைநாட்டி வருகின்றனர். 2012ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது. 2013, 2014ஆம் ஆண்டுகளில் மாகாணத்தில் முதலிடத்தினைப் பெற்றுக்கொண்டது. மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் தரம் 11 வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாக கடுக்காமுனை பாடசாலை அமைந்துள்ளது. இப்பாடசாலையும் பௌதிக மற்றும் கல்வியில் வளர்ச்சி பெற்றுவருகின்றது. இவ்வாறான சாதனைகளை நிலைநாட்டும் பாடசாலைகளையும், மாணவர்களையும், ஆசிரியர்கள் மற்றும் அதற்குத் துணையாக நின்ற யாவரையும் பாராட்ட வேண்டியதும் அவசியமானதொன்றே. அதேவேளை பொருளாதாரத்திலும் பின்தங்கி நின்றுகொண்டு, அனைத்து வசதிகளையும் கொண்ட பாடசாலை மாணவர்களோடு போட்டியிட்டு வெற்றியீட்டும் நமது சாதனைப் பெண்கள் பெரிதும் மதிக்கத்தக்கவர்கள்.



## க.பொ.த சாதரண தர பரீட்சையில் நல்ல பெறுபேறு

எல்லோரும் ஒன்றிணைந்தால் மாற்றங்களை ஏற்படுத்தலாம். வீட்டிற்குள் இருந்து கொண்டு உயரவில்லையா? என்று கேள்வி கேட்பதோடு நின்றுவிடாமல் பங்காளிகளாக மாறவேண்டும்.




- - படுவான் பாலகன்- -

# மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் சிறப்பு!

மட்டக்களப்பு மேற்கு என்னவாம்? என கந்தசாமியை நோக்கி குஞ்சிதம்பி குறிஞ்சாமுனை சந்தியில் நின்று கேட்டுக்கொண்டிருக்கின்றான். நானும் வவுணதீவு நோக்கி செல்ல சென்ற போது, கந்தசாமி அண்ணனை கண்டதும் அவ்விடத்தில் நின்றேன். நிற்கும் போது, மட்டக்களப்பு மேற்கு என்னவாம்? என்று கூறிய சத்தம் என் காதில் கேட்டது. என்ன அண்ண மட்டக்களப்பு மேற்கு என்று ஏதோ கதைக்கீங்க என்னத்த கதைக்கிறீங்க? என கேட்க, கந்தசாமி அண்ண பேச ஆரம்பித்தார்.

நம்மட மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தைப் பற்றிதான் கதைச்சிட்டு நிற்கின்றோம். என்ன அண்ண? ஏதும் பிரச்சினையா? இல்ல தம்பி, நம்மட வலயம், அண்மையில வெளியாகிய ஓ.எல் பெறுபேற்றில் நல்ல சித்தியைப் பெற்றிருக்கின்றது. என்று கந்தசாமி அண்ணன் சொன்ன வார்த்தையில் மகிழ்ச்சியும், முகமலர்ச்சியும் தெரிந்தது.

கந்தசாமி அண்ணனும் கல்விச் சேவையில் இருந்து ஓய்வுபெற்றவர். இதனால் எப்போதும் வலயத்தினைப்பற்றியும், படுவான்கரைப் பிள்ளைகளின் கற்றல் தொடர்பிலும் அடிக்கடி காண்பவர்களிடம் பேசிக்கொள்வார். இதனால் அவரைக் கண்டதும், சிலர் காணாதது போல் செல்கின்றமையும் வழமை. ஆனால் பல விடயங்கள் அவரிடையே பொதிந்திருக்கின்றன. நிறைய அறிந்து வைத்திருக்கின்றார். அவரே ஒரு ஊடகம் என்றும் சொல்லலாம். இப்படி நிறையவே கந்தசாமி அண்ணனைப் பற்றிக் கூறலாம். அவரைப்பற்றி பிறகு பேசுவோம். இப்போ மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் பற்றி அவர் கூறிய விடயங்களை சொல்லுறன். மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப்பகுதியில் கல்வி வலயமொன்று உருவாக வேண்டுமென்பது பலரது ஆசை. அதற்கேற்றால் போல் முழுக்க முழுக்க மாகாண பாடசாலைகளையும், கஸ்ட, அதிகஸ்ட பாடசாலைகளையும் உள்ளடக்கி மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் ஆரம்பிக்கப்பட்டு, அதற்கான அலுவலகம் குறிஞ்சாமுனையில் இயங்கி வருகின்றது.

வலயம் ஆரம்பிக்க வேண்டும் என பலர் ஆசைப்பட்டாலும் சிலர் அதனைப் பார்ப்பதற்கு இல்லை. 67 பாடசாலைகளை மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் கொண்டிருந்தாலும் 28 பாடசாலைகளில்தான் தரம் 11 வரை வகுப்புக்கள் உள்ளன. வலயம் ஆரம்பிக்கப்பட்டு 8 வருடங்கள் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய மாணவர்கள் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றியுள்ளர். ஆனால் 2017ம் ஆண்டிற்கு முன்னர் சித்தி வீதம் குறைவாகத்தான் இருந்தது.

இதற்கு பல காரணங்கள் இருக்கதான் செய்கின்றன. பொருளாதாரம், மாணவர்கள் ஊக்கமின்மை, பெற்றோர் ஊக்கமின்மை, ஆசிரியர் இன்மை என பல பிரச்சினைகள் இருக்கத்தான் செய்தன. ஆனால் இப்பவும் அப்பிரச்சினைகள் முழுமையாக தீர்ந்துவிடவில்லை. 9 வகுப்பு படிக்கும் போது, பணத்தினை கண்டவன் பாடசாலைக்கு இல்லை. பாடசாலை முடிந்ததும் படிப்பு நினைப்பில்லை, என்று பல பிரச்சினைகள் இப்போதும் இருக்கின்றன. அதைப்பற்றி பேசினா? பேசிக்கொண்டே போகலாம். என்று கூறிய கந்தசாமி அண்ண, பெறுபேற்ற பற்றி கூற தொடங்கினார்.
2016ம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பெறுபேறு 30 வீதமாக இருந்தது. அண்மையில் வெளியாகிய 2017ம் ஆண்டிற்கான பெறுபேறு 51வீதமாக மாறியிருக்கின்றது.

கடந்த ஆண்டைவிட 21வீதம் அதிகரித்திருக்கின்றது. இவ்வளர்ச்சி வேகவளர்ச்சிதான், ஆனால் எல்லா வலயங்களிலும் பெறுபேறு உயர்ந்து இருக்கின்றதாக பேசிக்கொள்கின்றார்கள். மாகாணத்தின் பகுப்பாய்வு வெளிவந்தால் உண்மை நிலையை அறியலாம். ஆனால் மட்டக்களப்பு மேற்கு வலயம் 21 வீதம் உயர்ந்திருப்பது, பெரிதான மாற்றம்தான். இதே போல பல பாடசாலைகளில் சாதனைகளும் புரியப்பட்டுத்தான் இருக்கின்றன.
வலயத்தில் உள்ள கித்துள் ஸ்ரீகிறிஸ்ணா வித்தியாலயம் 83சித்தி வீதத்தினைப் பெற்று முதலிடத்தினையும், காஞ்சிரங்குடா காமாட்சி வித்தியாலயம் 79வீதத்தினைப் பெற்று இரண்டாம் நிலையினையும், பாவற்கொடிசேனை விநாயகர் வித்தியாலயம் 78வீத்தினைப்பெற்று மூன்றாம் நிலையினையும், வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம் 72வீத்தினைப் பெற்று நான்காம் நிலையையும், முதலைக்குடா மகா வித்தியாலயம் 71வீதத்தினைப் பெற்று ஐந்தாம் நிலையினையும் பெற்றுள்ளன. இதோடு இன்னுமொரு சிறப்பு இருக்கின்றது. பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயத்தில் ஒருவரும் ஆங்கிலப் பாடம் சித்தியடையாத நிலையில் தற்போது சித்தியடைந்துள்ளனர். மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தற்போது வரை எந்ததொரு மாணவனும் 9ஏ தர சித்திகளை பெறாத நிலையும் இருக்கின்றது. ஆனால் 8ஏ,வீ சித்திகள் வரை பெற்றிருக்கின்றனர். ஆங்கிலப் பாடமே வீ தர சித்தியாகவுள்ளது. இவ்வாறு பல மாணவர்கள் இந்த வருடம் 8ஏ யுடன் வேறு சித்திகளையும் பெற்றுள்ளமையும் சிறப்பு. அதற்காக வலயத்தில் ஆங்கிலப் பாடத்தில் ஏ தர சித்திப்பெறப்படவில்லை என்பதுமில்லை. அண்மையில் வெளியாகிய பரீட்சைப்பெறுகளின் அடிப்படையில் பன்குடாவெளி பாடசாலை மாணவர் 9பாடங்களிலும் சித்தியடைந்திருந்த அதேவேளை இரண்டு பாடங்களில் ஏதர சித்தியையும் பெற்றுள்ளார். அவ்விரண்டு ஏ தர சித்திகளில் ஆங்கிலப்பாடமும், சமயப்பாடமும் உள்ளடக்கப்பட்டுள்ளமை எடுத்துக்கூறத்தக்க விடயமாகும்.
கரடியனாறு பாடசாலையில் கடந்த வருடம் 9பாடங்களிலும் சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை 10க்கு மேல் காணப்பட்டது. ஆனால் தற்போது 9பாடங்களிலும் சித்தியடையாத மாணவர்கள் என்று யாருமே அங்கு இல்லை. இவ்விடயமும் சிறப்புதான். அதேபோன்று பன்சேனைப் பாடசாலையின் சித்தி வீதம் பூச்சியமாக காணப்பட்டது. ஆனால் இந்த வருடம் 29.9வீதமாக மாறியிருக்கின்றது. பாவற்கொடிச்சேனைப் பாடலையின் பெறுபேறு கடந்த வருடம் 35வீதமாக காணப்பட்ட நிலையில், தற்போது கடந்த ஆண்டைவிட இருமடங்கு குறிப்பாக 78வீத சித்தியைப் பெற்றுள்ளது. என தகவல்களை அடிக்கிக்கொண்டே சொல்லி முடித்தார் கந்தசாமி.
பெறுபேற்றை மட்டும் கூறாமல், இன்னும் சில விடயங்களைப் பற்றியும் கந்தாமி குறிப்பிட்டார். பிள்ளையை படிப்பிக்க வேண்டுமென்ற ஆர்வம்கொண்டு, பெற்றோர் செயற்பட வேண்டும். பிள்ளையைப் பற்றி பெற்றோர் அக்கறை கொள்ளாவிட்டால் பெறுபேற்றை உயர்த்த முடியாது. மாணவர்களும் நாம் கற்றால் நமக்குத்தானே பலன் என்ற சிந்தனையேற்பட்டு கற்க முயற்சித்தால்தான் அதிக பெறுபேற்றை கூட்டலாம். பிள்ளையும், பெற்றோரும் உணராதவரை கல்வியில் முன்னேறுவது கடினம்தான். நம்மட சமூதாயத்தினை முன்னேற்ற வேண்டுமென்றால் எல்லோரும் ஒன்று சேரவேண்டும். வீட்டிற்குள் இருந்து கொண்டு உயரவில்லையா? என்று கேள்வி கேட்பதோடு நின்று விடாமல் பங்காளிகளாக மாறவேண்டும்.



அரங்கம் திருமணமேடை
மணமகள் /மணமகன் தேவை
விளம்பர செய்ய தொடர்பு கொள்ளுங்கள்

அரங்கம்
அரங்கம் FM

உங்கள் விளம்பரங்களை அரங்கம்
இணைய வானொலி மற்றும் செய்தித்தாளில்
பதிவு செய்து கொள்ள
070 300 900 1 065 222 911 2



# மனதைக் கவரும் மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள்

சட்டத்தரணி, பாடும் மீன், சு.ஸ்ரீகந்தராசா

கணவன்-மனைவி ஊடல்
------------------------------------

கணவன் மனைவிக்கிடையில் சிறு கருத்து வேறுபாடு. சண்டை, சச்சரவு என்று பெரிதாக எதுவுமில்லை. ஊடல்தான்! அதனால் அன்றிரவு ஒன்றாகப் படுத்திருந்தாலும் மனைவி ஒருக்களித்துப் படுத்துக் கொள்வாள். காலையில் எழுந்து களனிக்குப் போனவனுக்கு, வேலை முடிந்து வீடு திரும்பும்போது விரகதாபம் தலைக்கேறியிருந்தது. மனைவியின் அணைப்புக்கு ஏங்கி அதையே நினைத்திருந்தவனுக்கு உள்ளம் கசிந்தது. உடலும் கசிந்தது. வீட்டுக்கு வரும்போது வழமைபோல வாசலுக்கு வந்து வரவேற்கும் மனைவி அன்று வரவேயில்லை. அதனால் மனைவியை அழைப்பதுபோலப் பாடுகிறான்.

கண்டு வம்மிப் பூநிறத்தாள்
கவரிபுள்ளி மான் குயிலாள்
அரும்புகசு பூமுலையாள்
ஆசனையில் நித்திரையோ



வீட்டினுள்ளேயிருந்த அவளுக்கு விளங்கிவிட்டது. அவளது கணவனின் மனதை அவளுக்குத் தெரியாதா என்ன? இருந்தாலும் ஊடுதல் காமத்திற்கு இன்பம் அல்லவா? அதனால் இன்னும் கோபமாக இருப்பதுபோலக் காட்டி அறைக்கதவைப் பூட்டிவிட்டு உள்ளே இருந்து விடுகிறாள்.

பலாத்காரமாக உள்ளே சென்று அவளை அணைக்க அவனால் முடியும். இருந்தாலும் ஊடலின் சுகத்தை அனுபவிப்பதில் உள்ள இன்பத்தை இழக்க அவன் விரும்பவில்லை. ஊடலுக்குப் பின்வரும் கூடல்தான் இவ்வுலகப் பேரின்பம் அல்லவா? அத்தோடு அவள் நேற்றிரவு சொல்லியிருந்த செய்தி அவனது நெஞ்சில் இப்போதும் நிழலாடியது. அவள் இப்படிச் சொல்லியிருந்தாள்.

> அம்மியடியிலே
> அருகுவளைத் தொங்கலிலே
> துறப்புச் சொருகிருக்கு
> துறந்துவந்தாச் சம்மதந்தான்

கல்லோட கல்லணைய
கடலோட நீரணைய
உன்னோட நானணைய
என்ன குற்றம் செய்தேனோ

அவளது கோபத்தை முதலில் தணிக்கவேண்டும். அதனால், கூடலுக்கு ஏற்ற சூழல் நிலவுவதைக் குறிப்பால் உணர்த்தி அவளைத் தன்வயப்படுத்த எண்ணுகிறான்.
அதனால் அறைக்கு வெளியிலிருந்து அவனது குரல் ஒலிக்கிறது.
பொடுபொடென்ற மழைத்தூற்றல்
பூங்காரமான நிலா
கடுமிருட்டு மாலை வெள்ளி நீ, கதவுதிற
கண்மணியே

அவளிடமிருந்து பதிலேதும் வரவில்லை. அவனது எண்ணம் பலிக்கவில்லை. கதவும் திறக்கவில்லை.

இருமனம் கலந்து ஒருமித்த உறவில்தான் கிராமத்து மக்கள் இன்பம் கண்டார்கள். வாவென்று அழைத்தபோது வருகின்ற மனைவியுடன்; உறவுகொள்ளும் பண்பாடு அவர்களிடம் இருந்தது. வற்புறுத்தி அழைப்பதும், வலிந்து உறவு கொள்வதும் அவர்களுக்கு வழக்கமானதல்ல. அதனால், அவன் இப்படிப் பாடுகிறான்.

திண்ணைக்குள் படுக்கவொண்ணா
தெள்ளுக்கடி பொறுக்கவொண்ணா
கதவுதிற கண்மணியே
களங்கமறக் கதைச்சிருப்போம்

களங்கமறக் கதைச்சிருப்போம் என்பது எவ்வளவு பொருத்தமான வார்த்தைப் பிரயோகம்! உடல் உறவுக்கு உன்னை வற்புறுத்த மாட்டேன், மனம் திறந்து கதைத்துப் பேசி மகிழ்ந்திருக்கலாம் வா என்று இதைவிடச் சிறப்பாக எப்படி அழைக்க முடியும்? எப்படியாவது அவளது ஊடலைப் போக்கிவிட வேண்டும் என்பதுதான் அவனது நோக்கம். அதனால் எப்படியெல்லாம் அவளை மகிழ்வூட்ட முடியுமோ அப்படியெல்லாம் முயல்கிறான். அதனால் சிறுபிள்ளைத்தனமாக இப்படிப் பாடுகிறான்.

முந்திரியும் பழமும்
மூணுவகை முட்டாசியும்
கற்கண்டும் தாறன் நீ
கதவுதிற கண்மணியே

அவளென்ன சிறுபிள்ளையா? கணவன் படும் பாட்டைக் கண்டு மனதிற்குள் சிரிப்பு வந்தாலும், அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் உள்ளேயிருந்தவாறே பதில் சொல்கிறாள்.
திறக்கவொண்ணா என்கதவு
திண்ணையில் வேணுமெண்டா

> கல்லோட கல்லணைய
> கடலோட நீரணைய
> உன்னோட நானணைய
> என்ன குற்றம் செய்தேனோ

இறப்பால பாய்தருவேன்
என்னவாச்சும் செய்திருங்க

கதவைத் திறக்கமாட்டேன் என்று அவள் சொல்லவில்லை. அது மரியாதையில்லை என்பதால்! என்கதவு திறக்க முடியாதது என்றுதான் சொல்கிறாள். மனக்கதவையும் சேர்த்துத்தான் அவளது மறுமொழி அமைகிறது. அதேவேளை கணவன் வெறுந்தரையில் படுக்கக்கூடாது என்பதால் இறப்பிலிருந்து பாயொன்றை எடுத்துப் போடுகிறேன் என்கிறாள்.

அப்போது கூட அந்தப் பாயில் படுங்கள் என்று சொல்லவில்லை. அப்படிச் சொல்லி விட்டால் வெளியிலே படுக்கச் சொல்லி விடயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தாகிவிடுமே. குடும்பப் பெண்ணுக்கு அது அழகல்ல என்பதை அவள் அறிவாள். அதனால்தான் என்னவாச்சும் செய்திருங்க என்கிறாள். அந்த "என்னவாச்சும் செய்திருங்க" என்பதன் மூலம், உறவுக்குக் கட்டியம் கூறும் அவளது உள்ளம் தெரிகிறது. கொஞ்சம் விட்டுத்தான் பிடிப்போமே என்பது அவளது எண்ணம். அவனோ,

கட்டிக் கறந்த நாகு
கணுவடிக்கு வந்த நாகு
தட்டிச் சொறிஞ்ச நாகு - இப்போ,
தலைக்கிளப்பிப் பார்க்குதில்லை

என்று பாடி பழைய நினைவுகளை மீட்டு அவளைப் பக்குவமாக வழிக்குக் கொண்டு வரப் பார்க்கிறான். உன்மனம் புண்பட நடக்க விருப்பமில்லை. அதனால்,

விரகதாபம் வந்தும்
வெளியிலே பட்டினி
கிடக்கிறேன்
என்பதை அவன் உணர்த்தும் அழகு இரசிக்கத்தக்கது.
பால் என்றால் குடித்திடுவேன்
பழமென்றாலத் தின்றிடுவேன்
நூலென்றால் நெய்திடுவேன் உன்னை
நொய்ய விளையாடுவேனோ

அத்தோடு அவன் விடவில்லை. அவளிலும், அவளோடு கொள்ளும் உறவிலும் தனக்கு உள்ள ஆசையை ஓர் அப்பாவிபோலப் பிதற்றுகிறான்.

கத்தி எடுத்துக் கதிர்
அரியும் வேளையிலே
கள்ள எண்ணம் வந்து - என்ர,
கையறுத்துப் போட்டுதடி

பற்றை இடறிப்
பசுமாட்டில் கொண்டுழுந்து
இருட்டில் வழிநடந்தேன் - என்ர,
இளவயதுப் புத்தியால

இவ்வாறு அவன் பாடவும், உள்ளேயிருந்த அவளுக்குத் தன்னையும் அறியாமல் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்துவிட்டது. "கிளுக்" என்று சிரித்து விட்டாள். ஊடல் உடைந்து விட்டது என்பதை அவன் உணர்ந்து விடுகிறான். இதுவே தருணம் என்றறிந்து, நீ எனக்கு இன்பம் தர மறுத்தால் என்னால் என்ன செய்ய முடியும் பேசாமல் வெளியே படுக்கிறேன் என்ற பொருள்பட பெருமூச்சோடு பாடுகிறான்.

துவரம் பழமே என்ர
தொட்டிகையிற் தேன் வதையே
இச்சை வைத்த கைப்பொருளே - நீ,
இல்லையென்றால் என்னசெய்வேன்

இனியும் அவனை வாட்டுவது அவளுக்கு உடன்பாடாக இல்லை. ஏனென்றால் வாடுவது அவன் மட்டுந்தானா, அவளுந்தானே! எனவே கூடலுக்குத் தன் சம்மதத்தை குறிப்பாலுணர்த்திப் பாடுகின்றாள்.

அம்மியடியிலே
அருகுவளைத் தொங்கலிலே
துறப்புச் சொருகிருக்கு
துறந்துவந்தாச் சம்மதந்தான்

பாட்டைக் கேட்டதும் பாய்ந்தெழும்பிய அவன் எப்படித் திறப்பை எடுத்தான், எப்படித் திறந்தான் என்றெல்லாம் எண்ணிப் பார்க்க முடியாது. கண்ணிமைக்கும் நேரத்தில் அவளருகே சென்று விட்டான். அவளது கைகளைப் பற்றி காதுக்குள் மெதுவாகப் பாடுகிறான் -

உள்ளுடு கூட்டிருக்கா?
உள்ளதெல்லாம் வைச்சிருக்கா?
சாயப்பாய் போட்டிருக்கா?
வாமயிலே சாப்பிடத்தான்!

அவளை அணைத்துக்கொண்டு அறையினுள் செல்கிறான். இருவரும் ஒன்றானார். இவ்வுலகை மறந்தார். பாட்டு வரவில்லை. மௌனமொழியில் இலக்கியம் படைத்தார்கள்.

# “மட்டக்களப்பு“ உருவான கதை

-- கிரான் விஜய்- --


## மட்டக்களப்பு என்னும் பெயர் வந்தது குறித்த கருதுகோள்கள்

மட்டக்களப்பின் வரலாற்றை விபரிக்கும் முதல் நூல் “மட்டக்களப்பு மான்மியம்“ ஆகும். இதன் மூலப்பிரதியாக இருந்த ஏட்டின் பெயர் “மட்டக்களப்பு பூர்வசரித்திரம்“ என்பர். மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், கூத்திகன் எனும் அரசன் மட்டக்களப்பு கிராமத்தையும் மட்டக்களப்பு இராசதானியையும் உருவாக்கினான் எனக்கூறுகிறது. இதுபற்றி விலாவாரியாகவே விபரித்துள்ளது மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்.

விஜயனின் பின் இலங்கையை ஆண்ட சிறிகுலசேனனுடைய புத்திரனே கூத்திகன். சிறிகுலசேனனால் “விசயதூ பமிருந்து தென் மேற்குத் தொடங்கி தென்கிழக்கு வரையும்“ உள்ள பிரதேசத்திற்குப் பட்டங்கட்டப்பட்டவன், தனது நகரத்தை மாட்சிமைப்படுத்தக் கருதி முன்னகரங்களுக்கு எல்லாம் திக்கதிகாரிகள் வகுத்து ஆட்சி புரிந்தவன் என்கிறது மட்டக்களப்பு பூர்வ சரித்திரம். அவனது நகரத்தின் பெயர் பற்றிய தகவல்கள் ஏதும் கூறப்படவில்லை.

கூத்திகன், சிறிகுலசேனனுடைய புத்திரன், சிறிகுலசேனன் காலிங்க நகரத்தை அரசியற்றிவரும் சிறிகேசவ சந்திரசேனனுடைய இரண்டாம் புத்திரன், கலிங்கரிற் கலந்தவர், வங்ககுலம், வங்கர் தேசத்து மாமணி என்பவளை மணம் புரிந்தவன் என்கிற தகவல்களையும் தருகிறது மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்.

கூத்திகன் நகர்வலம் வருகையில் சமுத்திரக்கரையருகில் காளிசேனனுடைய சிங்கார மண்டபம், புட்பத்தோப்பான சிங்காரத் தோப்பு என்பவற்றைக் காண்கிறான். அங்குள்ள இடங்களை கிராமம் ஆக்கக் கருதி சிங்காரத் தோப்பைச் செப்பனிட்டு காளிநாட்டிலுள்ள குடிகள் 90 குடும்பங்களை வரவழைத்து




அதற்கருகாக அவர்களைக் குடியேற்றினான்.

மேலும், காலிங்க தேசமிருந்த தனது சந்ததிகளில் 96 குடும்பங்களையும், காளிகட்டத்திலுள்ள படையாட்சித் தலைவர்களோடு பற்பல செந்நெல் தானியம் செய்யும் 60 குடும்பங்கைளயும் வரவழைத்து, கழனிகள் திருத்தக் கருதி, காளிகட்டத்தால் வந்தவர்களுக்கு படையாட்சித் தலைவர்களைத் தலைவர்களாக்கி, அவர்களைக் கொண்டு சிங்காரத்தோப்புக்கு மேற்கிலிருந்த மேட்டுக்களப்பை, மண், கல், மலையாயிருந்த புட்டியை வெட்டி, மட்டமாய் மூடி, அந்த இடத்தில் மாளிகை உண்டாக்கினான் எனவும் படைவீரரை அக்களப்பு முனையில் சாலைகளமைத்து அவர்களை இருத்தி, அந்த இடத்திற்கு வீரர்முனை என நாமஞ்சூட்டடினான் எனவும் தனது மாளிகை அமைந்த இடத்திற்கு மட்டக்களப்பு எனும் நாமஞ்சூட்டி, பின் களப்பை மூட மண்கல் எடுத்த இடத்திற்கு மண்கல்புட்டி – மல்கம்பிட்டி என நாமஞ்சூட்டி அந்த இடத்தை இராசதானமாக்கினான் எனவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், தனது மூத்த புத்திரன் சேனன் இளவரசு காலம் வர, மட்டக்களப்பை இராசதானியாக்கி, “இலங்கை தென்திசையாயுள்ள மூன்றிலொரு பங்கை“ப் பட்டங்கட்டினான் எனவும் கூறப்படுட்டுள்ளது.

இவற்றிலிருந்து மட்டக்களப்பு எனும் கிராமத்தினை உருவாக்கியது கூத்திகனும் அவனால் காளிகட்டத்திலிருந்கு குடியேற்றப்பட்டவர்களுமே எனவும் கூத்திகனே மட்டக்களப்பு இராதானத்தை உருவாக்கி தன் மகன் சேனனுக்குப் பட்டங்கட்டினான் எனவும் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் கூறுவதை அறிய முடிகிறது.

இத்தகவல்கள் இப்பிரதேசத்தில் குடியேறியவர்களாலேயே “மட்டக்களப்பு“ உருவாக்கப்பட்டது என்ற கருத்தை தருவதாகவே அமைகிறது. ஆனால் தனது குடிகளைக் கொண்டல்லாது, காளிகட்டத்திலிருந்து வந்த படையாட்சித் தலைவர்களையும் பற்பல செந்நெல் தானியம் செய்யும் குடும்பங்களையும் கொண்டே கூத்திகன் மட்டக்களப்பை உருவாக்கினான் எனக்கூறப்பட்டுள்ளது!

அதேவேளை, பற்பல செந்நெல் தானியம் செய்யும் 60 குடும்பங்கள் பற்றிய தகவல்மூலம் இப்பிரதேசத்தில் விவசாயச் செய்கையும் இவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது என்ற கருத்தையும் இந்நூல் தருகின்றது. இத்தகவல்கள், இலங்கையின் ஆரம்பகாலக் குடியிருப்புக்கள் - இராசதானி – விவாசயச் செய்கை என்பவை விஜயன் வழியிலமைந்த குடியேற்ற வாசிகளாலேயே உருவாக்கப்பட்டன என மகாவம்சம் கூறும் தகவல்களுடன் ஒத்திருக்கிறது.

கூத்திகனுக்குப் பட்டம் கட்டிய காலம் கலி பிறந்து 2806 வருடம் என்கிறது மட்டக்களப்பு பூர்வ சரித்திரம். இவ்வாண்டு கி.மு. 296 ஆண்டுக்குச் சமம் என்கிறார் க.தங்கேஸ்வரி. வெல்லவூக்கோபால் கூத்திகனுடைய ஆட்சி கி.மு. 236 – 214 வரை மட்டக்களப்பில் நிலவியது எனக்குறிப்பிடுகிறார். இவற்றிலிருந்து 2200 வருடங்களுக்கு முன் மட்டக்களப்பு எனும் கிராமமும் அதன் பின்னர் மட்டக்களப்பு இராசதானமும் உருவாக்கப்பட்டன என மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் குறிப்பிடுகிறது எனக்கருதலாம்.

மட்டக்களப்பு இராசதானம் உருவாக்கப்படுவதற்கு முன்னரே மண்கல்புட்டி இராசதானமாக்கப்பட்டது என்ற தகவலும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது. இங்கு



பண்டைக்காலத்தில் உருவாக்கப்பட்ட இராசதானம் என்பது பிற்கால இரசாதானிகளை ஒத்ததொன்றல்ல என்பதனையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இவ் இராசதானிகள் மைய நிலையங்களாக இருந்திருக்கலாம்.

மகாவம்சம் விஜயனின் பின் அவன் சகோதரன் பண்டுவாசுதேவ நாட்டை ஆண்டான் எனக்கூறுகிறது. ஆனால் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் விஜயனின் பின் சிறிகுலசேனன் இலங்கையை ஆண்டான் என்கிறது. அவனது புத்திரனே கூத்திகன். எனினும் இலங்கை (பாலி) வரலாற்று நூல்களில் காணப்படுகின்ற முரண்பாடுகள், தேவநம்பியதிஸ்ஸனுக்கு முற்பட்ட காலம் குறித்த தெளிவற்ற தகவல்கள் என்பனவற்றைக் கருத்தில் கொண்டால் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் கூறும் இத்தகவல்களைப் பிழையெனக் கூறுவதற்கும் முடியாதுள்ளது. இக்காலத்திற்கு முன்னர் அல்லது இக்காலத்தே மட்டக்களப்பு பிரதேசத்தில் மக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கும் தொல்பொருள் சான்றுகள் உள்ளன.

இலங்கை வரலாற்றில் சேனன், குத்திகன் பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. குதிரைகளை இங்கு கொண்டு வந்து வணிகம் செய்த ஒருவரது பிள்ளைகளான சேனன், குட்டகன் ஆகிய இரண்டு தமிழர்கள் சூரதிசனை (கி.மு. 247 - 237) வெற்றி கொண்டார்கள். பெரும் படையொன்றைத் திரட்டிக்கொண்டு, இந்த இருவரும் சேர்ந்து இருபத்திரண்டு வருடகாலம் நீதி தவறாமல் ஆட்சி செய்தனர் என்கிறது மகாவம்சம்.

முகாவம்ச சேனன் - குட்டகனுக்கும் பூர்வ சரித்திர கூத்திகன் - சேனனுக்கும் இடையே சிறியளவு காலவேறுபாடுண்டு. ஆனால், மன்னர் வரிசையில் வேறுபாடுகள் உண்டு. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் இலங்கை வரலாற்றை நன்கறிந்து எழுதப்பட்டதொன்று போலவே தெரிகிறது.

இதேவேளை, மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் குறிப்பிடப்படும் மட்டக்களப்பு, இன்று மட்டக்களப்பு நகரம் என அறியப்படும் இடமல்ல என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இன்றைய மட்டக்களப்பிலிருந்து 30 மைல் தெற்கில் சம்மாந்துறைக்கருகே உள்ள இடத்தைத்தான் மட்டக்களப்பு என மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் குறிப்பிடுகிறது என த.சிவாரம் குறிப்பிட்டிருக்கிறார். 1767 ஆம் ஆண்டளவில் மட்டக்களப்புக்குப் பொறுப்பான அதிகாரி ஜோஹோனஸ் பிறாங்கின் குறிப்பிலிருந்து இதனை அறியமுடிந்தது எனவும் சிவராம் குறிப்பிடுகிறார்.

இன்றைய சம்மாந்துறை அல்லது மட்டக்களப்புத் தரவையே அவ்விடம் என்கிறார் வெல்லவூர்க்கோபால். இன்று மட்டக்களப்பு எனப்படுவது புளியந்தீவு என முன்னர் அழைக்கப்பட்ட இடமாகும். ஐரோப்பியர் ஆட்சிக் காலத்திலேயே மட்டக்களப்பு நகரம், மட்டக்களப்பு பிரதேசம் எனும் தற்போதைய பெயர் வழக்குகள் தோன்றின.

மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் கூறும் இத்தகவல்கைள உறுதிப்படுத்தவதற்கான வேறு வரலாற்றாதாரங்கள் எவையும் அறியப்படவில்லை. அதேவேளை, இத்தகவல்களை மறுத்துரைப்பதற்கும் வழியில்லை!

மேலும், முன்னர் இப்பிரதேசம் எப்பெயரால் அழைக்கப்பட்டது என்பதனை கண்டறிவதும் அவசியமானதாகும். மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்திலேயே இவை பற்றிய சில குறிப்புக்கள் உண்டு. கண்டெடுக்கப்பட்டுள்ள தொல்பொருள் சான்றுகளையும் பூர்விக குடிகளின் வரலாற்றையும் ஆராய்வதினூடாக இதற்கான விடைகளைக் காணலாம்.

எவ்வாறெனினும் இலக்கியங்களில் பதினைந்தாம் நூற்றாண்டில் மட்டக்களப்பு எனும் சொல் இடம் பெறத்தொடங்கிவிட்டதனைக் காணமுடிகிறது. “கண்ணகி வழக்குரை“ எனும் இலக்கியத்திலும் “கோவலனர் கதை“ எனும் இலக்கியத்திலும் மட்டக்களப்பு எனும் சொல் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாண வரலாற்றைக் கூறும் “வையாபாடல்“ எனும் வரலாற்று நூலிலும் மட்டக்களப்பு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல்கள் 1500 ஆம் ஆண்டளவில் எழுந்தனவையாகும். எ.ஃப் எக்ஸ் சி. நடராசா அவர்கள், “மட்டக்களப்பு என்ற சொற்பிரயோகம் பதினைந்தாம் நூற்றாண்டில் இலக்கியத்தில் ஏறியுண்டென்பது பெற்றாம்“ என்கிறார்.



# மட்டக்களப்பு வேடுவர் ஆய்வின் முன்னோடி செலிக்மன்

-- என்.சரவணன் --



இலங்கையின் இனவரைவியல் பற்றிய ஆய்வுகளில் வேடுவர் பற்றி ஆய்வு செய்த செலிக்மன் தம்பதிகளின் ஆய்வு இன்று வரை மானுடவியலாளர்கள், இனவியலாளர்கள் போன்றோரால் போற்றப்பட்டு வருகிறது.

செலிக்மன் (Charles Gabriel Seligman) தனது ஆய்வை மேற்கொள்வதற்காக 16.12.1907 அன்று தனது துணைவியுடன் (Brenda Zara Salaman) இங்கிலாந்திலிருந்து இலங்கை



வந்தடைந்தார். மொத்தம் மூன்று ஆண்டுகள் மட்டுமே அவர் தங்கியிருந்து நாடு முழுவதும் அலைந்து திரிந்து தனது ஆய்வை முடித்துக் கொண்டார். அவர் மேற்கொண்ட ஆய்வு 1911 ஆம் ஆண்டு “The Veddas" (வேடுவர்) என்கிற தலைப்பில் 623 பக்கங்களில் நூலாக வெளிவந்தது. அதை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் லண்டனில் வெளியிட்டது. இந்த நூல் உலகளவில் பிரசித்தம் பெற்றது.

இந்த நூலுக்காக செலிக்மன் தம்பதிகள் பல மாதங்கள் வேடுவர்களுடனேயே வாழ்ந்திருக்கிறார்கள். காடுகளிலும், குகைகளிலும் அவர்கள் கண்டவை, கேட்டவை என்பவற்றை விஞ்ஞானபூர்வமான ஆய்வுக்குட்படுத்தினார்கள். வேடுவர்களின் இசையைப் பதிவு செய்திருக்கிறார்கள். செலிக்மன் எடுத்த புகைப்படங்களும், ஓவியங்களும், விளக்கப் படங்களும் அந்த நூலில் பல இடங்களில் காணக் கிடைக்கிறன.
செலிக்மனும் அவரது துணைவி பிரண்டா சாராவும் அந்தப் பெரு நூலின் ஆசிரியர்கள். 98 ஆண்டுகள் கழித்து 2009 இல் இந்த நூலை இலங்கையில் சிங்களத்திற்கு மொழிபெயர்த்து (மொழிபெயர்ப்பு: நிஸ்ஸங்க பெரேரா) கொடகே பதிப்பகம் வெளியிட்டது. அதே ஆண்டு சிங்களத்தில் “பாஸ்ட் பப்ளிஷன்” (மொழிபெயர்ப்பு: சந்திரசிறி ரணசிங்க) என்கிற நிறுவனமும் வெளியிட்டது. தமிழில் செலிக்மன் பற்றி எங்கு தேடினாலும் சிறு தகவல் கூட கிடைப்பதில்லை.

ஆனால், அவரது ஆய்வை சிங்கள பேரினவாதிகள் போற்றுவதில்லை. அதற்கான காரணமும் இலங்கை சிங்கள நாடு என்கிற ஐதீகத்தை உடைக்கும் பல சான்றுகளும் அவரது ஆய்வில் புதைந்து கிடக்கின்றன. உதாரணத்திற்கு புத்தர் இலங்கைக்கு வந்திறங்கியது யாழ்ப்பாணத்திலிருக்கும் நாகதீபத்தில் என்கிற வரலாற்றுப் புரட்டை இன்றைய ஆய்வாளர்கள் பலர் மறுக்கிறார்கள். சமீபத்தில் கூட பௌத்த மதத் தலைவர்களில் ஒருவரான வல்பொல கல்யாணதிஸ்ஸ மஹா தேரோ ஆற்றிய ஒரு உரையில் “மகாவம்சத்தில் குறிப்படப்படும் நாகதீபம் என்பது யாழ்ப்பாணத்தில் இருப்பதல்ல. அது மகியங்கனைக்கு அருகில் இருக்கிறது என்றும். சில அரசியல் வரலாற்றுக் காரணங்களினால் அந்த உண்மை மறைக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போது அந்த உண்மையை வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது.” என்று கூறியிருந்தார்.

செலிக்மன் தனது நூலில் நாகதீப என்கிற இடத்தைத் தான் மதவாச்சி என்று அழைத்து வந்திருக்கிறார்கள் என்று ஹென்றி பார்க்கரை ஆதாரம் காட்டுகிறார். ஹென்றி பார்க்கர் (Henry Parker) கிட்டத்தட்ட செலிக்மன் காலத்திலேயே “சிங்கள பழங்குடிகளின் வாய்மொழி நாட்டுப்புற கதைகளை ஆய்வு செய்து 1910இல் “Village folk-tales of Ceylon" என்கிற நூலை எழுதியவர். செலிக்மன் ஹென்றியை அவரின் நூலில் 122 இடங்களில் ஆதாரம் காட்டுகிறார். அதுபோல ஹென்றி பார்க்கர் 1909 இல் வெளியிட்ட முக்கிய நூலான புராதன இலங்கை (Ancient Ceylon) என்கிற நூலில் செலிக்மனின் ஆய்வை பல இடங்களில் பிரஸ்தாபிக்கிறார்.

செலிக்மன் தனது ஆய்வின் விபரங்களை (வரைபடத்துடன்) 23.05.1908 அன்று “இலங்கை றோயல் ஆசிய கழகத்தின்” கூட்டத்தில் உரையாற்றியிருக்கிறார். ஜனைஸை கூட்டத்தின் போது நிகழ்ந்த கலந்துரையாடலும் அவரின் பரிந்துரைகளும் அக்கழகத்தின் சஞ்சிகையில் வெளிவந்திருக்கின்றன. அப்போது அந்தக் கழகத்தின் தலைவராக இருந்தவர் ஜோன் பெர்கியுசன். அவர் தான் செலிக்மனை தேசாபதியின் வேண்டுகோளின் பேரில் இலங்கைக்கு வரவழைத்தவர். இலங்கையின் தேசாதிபதி ஹென்றி மக்கலம் (Sir Heney McCallum) அந்த அவைக்குத் தலைமை தாங்கியிருக்கிறார். அக்கூட்டத்தை



(Charles Gabriel Seligman)

ஆரம்பித்து அவர் உரையாற்றும் போது

“இலங்கையில் வேடுவர் இனம் மிகவும் வேகமாக அழிந்துவந்திருக்கிறது. இதப் பற்றிய விரிவான ஒரு சமூக ஆய்வொன்றின் அவசியம் கருதி கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஹட்டன் (Haddon) அவர்களைக் கொட்டுக்கொண்டேன் அவர் இந்த விடயத்துக்கு பொருத்தமானவராக பேராசிரியர் செலிக்மனை எமக்கு



பரிந்துரைத்தார்” என்றார். அப்போது அந்தக் கூட்டத்தின் இறுதியில் அக்கழகத்தின் உபதலைவராக இருந்த சேர் பொன் அருணாச்சலம் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்து ஆமோதித்தார்.ஜனைஸை

## இலங்கை சிங்கள நாடு என்கிற ஐதீகத்தை உடைக்கும் பல சான்றுகளும் அவரது ஆய்வில் புதைந்து கிடக்கின்றன

செலிக்மன் தனது ஆய்வை முடித்து விட்டுத் திரும்பியதன் பின்னர் பல உலக நாடுகளில் இலங்கையின் வேடுவர் குறித்தும் அவர்களின் எதிர்காலம் குறித்தும் விரிவுரைகளை நிகழ்த்தியிருப்பதை அறிய முடிகிறது. ஜனைஸை

பின்வந்த ஆய்வாளர்கள் பலருக்கும் கைகொடுத்த நூல் அது. இனவரைவியல் மாத்திரமல்ல, தொல்லியல், சாதியம் பற்றிய ஆய்வுகளுக்குக் கூட அவரது இந்த நூலைக் கையாண்டிருப்பதை பல இடங்களிலும் காணமுடிகிறது.

இந்த ஆய்வைத் தூண்டிய காரணிகள் பற்றி அவரது முன்னுரையில் காணக் கிடைக்கிறது.

வேடர்களுக்கும் தமிழ் சிங்கள மக்களுக்கும் உள்ள தொடர்பு என்ன என்பது பற்றிய ஆழமான ஆய்வு விபரங்களை அவர் முன்வைத்தார். அவரது நூலைப் பார்த்தால் அவருக்கு இது தொடர்பில் உசாத்துணையாகப் பயன்படுத்துமளவுக்கு அவருக்கு முந்திய நூல்கள கிடைக்கவில்லை என்பதை அறிய முடியும். ஆனால் அவருக்கு பின்வந்தோர் பலர் செலிக்மனின் ஆய்வைக் கொண்டாடுவதைக் காண முடியும்.

அவர் ஆய்வு செய்தது ஒட்டுமொத்த இலங்கையின் ஆதிவாசிகளைப் பற்றித்தான் என்றாலும் ஒரு தனியான அத்தியாயம் (12வது) கிழக்கிலங்கை கடல் வேடுவர் பற்றியது. இலங்கையின் கராவ (சிங்கள சமூகத்தில்), கரையார் (தமிழ் சமூகத்தில்) ஆகிய சாதிகளை ஆராய்ந்தவர்களும் இந்த ஆய்வை உன்னிப்பாக கையாண்டுள்ளனர்.

இலங்கையின் பழங்குடிகளை ஆராய்பவர்கள் நூற்றாண்டுக்கு முன்னரேயே அது பற்றிய குறிப்புகளை எழுதிய Robert knox,John Davy, D.Pridham, Sir Emerson Tennent, B.F.Hartshorne, John Bailey, C.S.V.Stevens போன்றோரின் குறிப்புகளையும் கையாள்வார்கள். இலங்கையின் பழங்குடிகள் பற்றி இவர்கள் உள்ளிட்ட மேலும் பலர் பற்றிய விபரங்களைப் பற்றி 1899 இலேயே பேராசிரியர் W.M.TURNER, எழுதிய“Contributions to the Craniology of the people of the Empire of India" என்கிற நூலில் நிறையவே எழுதியிருக்கிறார். செலிக்மன் போல அதை ஒரு ஆழமான, விஞ்ஞானபூர்வமான விடயதானமாக எடுத்து கள ஆய்வுகள் செய்து பன்முகக் கோணத்தில் விரிவான விஞ்ஞானபூர்வமான ஆய்வாக முன்வைத்தது இல்லை.

அவர் மட்டக்களப்பு வேடுவர் குறித்து குறிப்பாக கடல் வேடுவர் குறித்து எழுதியவற்றை அடுத்த வாரம் பார்ப்போம்.

அரங்கம்
13
வெள்ளி, சித்திரை 06, 2018.
இதழ் – 07




# சுற்றுலா வளர்ச்சியில் அழகுக்கலை நிலையங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணங்களை ஊக்குவிக்கும் நோக்கில் அழகுக்கலை நிலையங்கள் சிலவற்றுக்கு அரசு சிறப்பு பயிற்சிகளை வழங்கவுள்ளது.

இதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 அழகு நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அப்படியாக தெரிவு செய்யப்பட்ட ஒரு நிலையத்துக்கு அண்மையில் விஜயம் செய்த வலு அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சிகள் அமைச்சர் சந்திம வீரக்கொடி அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தார்.


மட்டக்களப்பு இருதயபுரம் மத்தியில் அமைந்துள்ள அக்ஷாயினி அழகு கலை நிலையத்தும் விஜயம் செய்த அமைச்சர், அங்கு பணி நடக்கும் விதம், பணியாளர் திறன் ஆகியவற்றை அதிகாரிகளுடன்



மதிப்பீடு செய்தார்.

மேலதிக பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அக்ஷாயினி அழகு கலை நிலையத்தின் இயக்குனர், தட்ஷாயினி தர்மேந்திரன், இந்த பயிற்சித் திட்டத்தின் மூலம் தாம் மேலும் பல அழகுக் கலை நிபுணர்களை உருவாக்க முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

சர்வோதயம், கச்சேரி, அழகுக்கலை நிபுணர்கள் அமைப்பு ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.







## சிறுவர் ஆக்கம்




கெனோஷி
ஸ்டோக்கஸ்
47 அந்தோணியர் வீதி
மட்டக்களப்பு



V.கார்திகாயினி
மட்டக்களப்பு









# வெருகல் கலாசாரம்

பாலா.சுகுமார்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்

வெருகல் ஒரு சிறப்பு மிகு கலாசாரத்தின் சங்கமம். கொட்டியாரத்தின் பெருமையை பறை சாற்றும் உறவுகளின் சந்திப்பாய் தடம் பதித்த ஒரு பண்பாட்டு படர்ச்சி. திருகோணமலைத் தமிழகமும் மட்டக்களப்பு தமிழகமும் இணைந்த ஒரு தேசத்தார் கோயிலின் வளக்காறாய் நீண்டிருக்கும் தொல் மரபு இங்கு புதைந்து கிடக்கிறது.
வெருகல் கழிமுகம் நம் தொல் தமிழர்களின் அடையாளங்கள் நிறைந்த பகுதி. முது மக்கள் தாழிகளும் அடையாளச் சின்னங்களுமாய் வரலாற்றை சொல்லித்தரும் மூலங்கள்.
குன்றுகளில் குடைந்திருக்கும் தொல் தமிழ் எழுத்துக்களிலான கல்வெட்டுகள், பழமை மிகு கோயில்களின் அழிபாடுகளுடன் ஈழத் தமிழர்களின் தொன்ம வரலாற்றை கண்டறிய பதிவுகளாய் நம் கண்முன் விரிந்து கிடக்கும் ஆதாரங்கள்.
மாவலியாள் தன் மடி சிரித்து மகிழ்ந்து உலாவும் கடலுடன் சங்கமித்து களி கொள்ளும் காட்சிகளின் நீட்சியாய் நொங்கும் நுரையுமாய் பொங்கி பிரவாகித்து ஓடும் அழகு.
இந்த பின்னணியில் வெருகல் சித்திர வேலாயுதர் கோயிலும் அதனையடியொற்றி காலம் காலமாய் தொடரும் கலாசார மரபு திருவிழா காலங்களில் நம்மை சுகானுபத்துனுள் கொண்டு செல்லும் .
சுமார் நாற்பது வருடங்களுக்கு முன் எங்கு திரும்பினாலும் கூடார வண்டில்களின் கூட்டம் திருவிழாவின் கடைசி மூன்று நாளும் நிறைந்திருக்கும். கூடார வண்டில்கள் சிறு வீடுகளாய் மாறியிருக்கும். காலை மாலை என்னேரமும் சாப்பாடும் சந்தோசமும். மாவலியாற்றில் குளிப்பதும் கோயிலுக்குள் சாமி கும்பிடலும் நண்பர்களுடன் விளாங்காய் நாவல்ப்பழம் ஆய்தலும் ஆற்றை தாண்டி தாமரைக் காய் ஆய்தலும் சூழ இருக்கும் சோழன் சேனைகளில் சோழன் வாங்கி சுடுதலுமாய் மகிழ்வின் பொழுதுகளாய் கழியும் நாட்கள். இரவானதும் திருவிழா எத்தனை சந்தோசம் அது இன்றும் நம் மண்ணில் தொடர்கிறது.
திருமலையிலிருந்து கால் நடையாக வருவோர். வாகனங்களில் வந்து குவிவோர். கொட்டியாரத்தின் அனைத்து ஊர்களிலிருந்தும் சாரி சாரியாய் அணி வகுத்து வரும் சலங்கை சத்தம் எங்கும் நிறைய அழகுறு காளை மாடுகள் பூட்டிய



வண்டில்கள்.
வெருகல் குளக்கோட்டு மன்னனும் ஆடகசௌந்தரியும் சந்தித்த இடம் வன்னிபங்களின் ஆட்சியில் ஒரு மையமாக விளங்கிய இடம் இராஜசிங்க ராஜாக்கள் வழிபட்டு கொடையும் நிவந்தமும் அளித்த ஆலயம்.
என்றும் நம் பண்பாட்டின் உறைவிடம் அது.

ஆலய வரலாறு : கர்ணபரம்பரைக் கதை
------------------------------------------------------

இவ்வாலயம் தொடர்பான கர்ண பரம்பரைக் கதை நெடுங்காலமாக வழக்கில் இருந்து வருகிறது.
வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயில் தற்போதுள்ள இடத்தில் ஒரு ஆலமரம் படர்ந்து வளர்ந்து நின்றதாகவும், அந்த ஆல மரப் பொந்தில் சுயமாக தோன்றிய வேல் ஒன்று இருந்ததாகவும் அந்த வேலுக்கு மக்கள் பூசை செய்து வழிபாடுகளை மேற்கொண்டு வந்ததாகவும் இக்கர்ண பரம்பரைக் கதை மூலம் அறிய முடிகிறது.

ஒரு சமயம் இந்தியாவிலிருந்து இலங்கை வந்த நல்லைநாதச் செட்டியார் தன் உடம்பில் உள்ள படைநோய் நீங்கும் பொருட்டு திருகோணமலை வழியாக கதிர்காமத்திற்கு கால்நடையாக தல யாத்திரைப் மேற்கொண்டு வெருகலை அடைந்த சமயம் இரவு நேரமாகிவிட்டமையாலும் மிக்க களைப்புற்றிருந்தமையாலும் வெருகலில் வேல் இருந்த ஆல மரத்தின் கீழ் இரவுப் பொழுதில் தூங்கியுள்ளார். களைப்பால் செட்டியார் மிகு தூக்கம் கொண்டிருந்த வேளையில் முருகப் பெருமானான கதிர்காமக் கந்தன் செட்டியாரின் கனவில் தோன்றி அவ்விடத்தில் தனக்கு ஓர் ஆலயம் அமைக்கும் படி அருளாணை இட்டுள்ளார்.

கந்தனின் அருளாணையினால் திகிலடைந்த செட்டியார் ஆலயம் அமைப்பதற்கு நான் பணம், பொருளுக்கு என்ன செய்வேன் எனப்புலம்பி கந்தன் அருள் வேண்டியபோது கந்தன் செட்டியார் முன் மீண்டும் கனவில் தோன்றி கல்மலையில் திரவியம் இருப்பதாகவும் அங்கு சென்று திரவியக் கடாரம் எடுத்து ஆலயம் அமைக்கும் படியும் செப்பி திரவியம் இருக்கும் கல்மலைக்கு செல்லும் வழியையும் கந்தன் செட்டியாருக்குக் கூறியுள்ளார்.

முருகப் பெருமான் கூறியபடி செட்டியார் கல்மலையுள்ள இடம்சென்று திரவியக் கடாரத்தை பெற்று அதில் இருந்த திரவியங்களைக் கொண்டு செட்டியார் சித்திரவேலாயுத சுவாமிக்கு ஆலயம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். செட்டியார் ஆலயம் அமைக்க திரவியம் எடுத்த இடம் இப்பொழுதும், திரவியம் எடுத்த இடம் என்னும் பெயரால் மக்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. ஆலயத் திருப்பணியில் ஈடுபட்ட செட்டியார் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்பவற்றைக் கொண்ட ஆலயத்தைக் கட்டி முடித்துள்ளார்.

ஆலய கட்டட வேலைகளை முடித்த செட்டியார் கண்டிய மன்னனிடம் சென்று மன்னிடம் ஏழு மாணிக்கக் கற்களை பெற்றுவந்து அவற்றை அவ்வாலயக் கருவறையில் யந்திரத்தின் கீழ் வைத்து கந்தனான முருகப்பெருமானை பிரதிஷ்டை செய்துள்ளார்.

ஆலய திருப்பணியை நிறைவேற்றிய செட்டியார் ஆலய கும்பாபிஷேகத்திற்கு கண்டிய மன்னனையும் அழைத்தமையால் மாணிக்கக் கற்களை வழங்கிய கண்டி மன்னனும் வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயில் கும்பாபிஷேகப் பெருவிழாவில் கலந்து கொண்டார். கண்டிய மன்னன் ஆலய கும்பாபிஷே கத்திற்கு வந்த சமயம் வரும் வழியில் மக்கள் வெருகல் ஆலயத்திற்கு அண்மையில் வழியில் வீதியில் நெற்கதிர்களால் பந்தல் அமைத்து வரவேற்றுள்ளனர்.
இதனால் மகிழ்ச்சியடைந்த கண்டி மன்னன் அவ்விடயத்திற்கு ‘கதிர்வெளி’ எனப் பெயர் சூட்டியுள்ளார்.

வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோயில் திருப்பணி வேலைகளை முடித்து செட்டியார் ஆலய கும்பாபிஷேகத்தினை இனிதே செய்து முடித்ததும் முருகன் அருளால் செட்டியாரின் உடலில் இருந்த படைநோயும் நீங்கிவிட்டதாக வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயில் வரலாறு தொடர்பிலான கர்ணபரம்பரைக் கதை மூலம் அறிய முடிகிறது.
கண்டி மன்னன் ‘கதிர்வெளி’ எனப் பெயர் சூட்டிய பெயர் மருவி இப்பொழுது அவ்விடம் ‘கதிரவெளி’ என அழைக்கப்படுகின்றது. இன்றுள்ள கதிரவெளி கிராமம் மட்டக்களப்பு மாவட்டத்தின் வட எல்லைக் கிராமமாகும். செட்டியாரால் அமைக்கப்பட்ட ஆலயம் காலத்திற்கு காலம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு இன்று புதுப் பொலிவுடன் திகழ்கிறது”



## ஃபேஸ்புக் நிறுவனத்தின் பயன்பாட்டாளர்கள் 8 கோடிக்கும் அதிகமானோரின் தகவல்கள் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளன




கேம்பிரிட்ஜ் அனலிடிகா என்னும் அரசியல் ஆலோசனை நிறுவனத்தால், 8 கோடியே 70 லட்சம் பயன்பாட்டாளர்களின் தகவல்கள் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் ஒப்பு கொண்டுள்ளது.

முதலில் கூறப்பட்ட எண்ணிக்கையை பார்க்க இது மிகவும் அதிகமாகும்.

பாதிக்கப்பட்டவர்களில் பதினொரு லட்சம் பேர் பிரிட்டனை சேர்ந்தவர்கள் என கூறப்படுகின்றது.

இந்த விவகாரத்தை முதலில் வெளிப்படுத்திய கிறிட்டோ∴பவர் வேலி, 5 கோடி பயன்பாட்டாளர்களின் தகவல்கள் கசிந்துள்ளதாக தெரிவித்திருந்தார்.

முன்னதாக, தகவல்களை வழங்கும் தளத்தை ∴பேஸ்புக் வழங்குகிறது அதை எவ்வாறு பயன்படுத்துவது என்பது அவர்களின் பொறுப்பு என முன்னர் கருதியதாக செய்தியாளர்களிடம் தெரிவித்த ∴பேஸ்புக் நிறுவனர் மார்க் சக்கர்பர்க், அத்தகைய குறுகிய எண்ணம், தவறானது என்று இப்போது ஒப்புக்கொண்டுள்ளார்.

□தகவல்களை வழங்கும் தளங்களை உருவாக்குவது மட்டும் எங்கள் பொறுப்பல்ல, அதை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை கண்காணிப்பதும் எங்கள் பொறுப்பு” என்று மார்க் தெரிவித்துள்ளார்.

தொடரும் பல சர்ச்சைகளுக்கு மத்தியில், ∴பேஸ்புக் நிறுவனத்துக்கு தலைமை தாங்குவதற்கு தான் சிறந்த நபர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கேம்பிரிட்ஜ் அனலிடிகா என்னும் நிறுவனம் தங்கள் அரசியல் வாடிக்கையாளர்களுக்காக ∴பேஸ்புக் பயனாளிகளின் தகவல்களை தவறாக பயன்படுத்தியதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

”நம்பிக்கை மீறல் நடைபெற்றுள்ளது” என தனது முகநூல் பதவில் தெரிவித்திருந்தார் மார்க் சக்கர்பர்க்.

”∴பேஸ்புக்கை தொடங்கியது நான்தான் எனவே இதில் என்ன நடந்தாலும் நான்தான் பொறுப்பு” என்றும் அவர் தெரிவித்திருந்தார்.



# பழந்தமிழ் கிராமம் : பழுகாமம்

-- பிரசாத் சொக்கலிங்கம் --

மட்டக்களப்பினூடே நீண்டு பரந்து விரிந்து கிடக்கின்றது மட்டக்களப்பு வாவி, வாவிக்குக் கிழக்கே சூரியன் எழுவதால் எழுவான் கரை என்றும் மேற்கே படுவதால் (மறைவதால்) படுவான் கரை என்றும் நிலப்பிரதேசங்களை அழைப்பது மட்டக்களப்பின் மொழி மரபு. வடக்கு, கிழக்கு, தெற்கு என மூன்று பக்கமும் படுவான்கரையில் வாவியால் சூழப்பட்டு மேற்கு பக்கம் நிலத்தொடர்பு மூலம் படுவான் கரையுடன் இணைக்கப்பட்ட ஓர் அழகிய கிராமம் இது.

“பழுகாமம் என்பது மட்டக்களப்பு நகரிலிருந்து வடமேற்குத் திசையில் அமைந்திருக்கும் போரதீவின் ஒரு கிராமமாகும். ஐந்து பாண்டவ வீரர்களுக்குரிய ஒரு புனித கோயில் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இக்கிராமத்தில் 10 நாட்களாக தொடர்ந்து நிகழும் முக்கிய வருடாந்த திருவிழாவின்போது ஒரு பெரிய மக்கள் கூட்டம் இக்கிராமத்தில் ஒன்று சேர்வதுடன் இவர்கள் சபதம் செய்து கொண்டு தங்களை தாங்களே கட்டுப்படுத்திக் கொண்டவர்களாக நெருப்புக்குழியில் பரப்பப்பட்டிருக்கும் எரியும் விறகுகளின் மேல் வெறுங்காலுடன் நடந்து செல்வார்கள்”

பிரித்தானிய காலனித்துவ இலங்கையின் கேந்திர பிரதேசங்களை பற்றிப் பதிவு செய்திருந்த, 1834 இல் பதிப்பிக்கப்பட்ட “CEYLON GAZETTEER" இந்தப் பண்டைய பழுகாமம் கிராமத்தை மேற்கண்டவாறு விபரிக்கின்றது.



வருகின்ற அனைத்து தீர்வை வரிகளும் தனக்கே உரியவை என்று பழுகாம வன்னிமையான செல்லப்பண்டாரம் உரிமை கோரியதால், அவருக்கும் போரதீவு வன்னிமை தர்மசங்கரிக்கும் முரண்பாடு ஏற்பட்டது. அதைத் தீர்க்க, அப்போதைய கண்டி மன்னன் (செனரத்) அவையைக் கூட்டி விசாரித்திருக்கிறான். அந்த அவையில் யாழ்ப்பாண அரசின் தூதனாக வந்த கொட்டியார வன்னிமை செல்லப்பண்டாரம், மட்டக்களப்பை தன் பகுதியோடு இணைத்து ஆளத்தொடங்கினாராம்.

இந்தக் குறிப்பில் வன்னிமைகள், “மன்னர்கள்” என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள் என்பதும் கவனிக்கப்படவேண்டியவை என்பதோடு கண்டி அரசனின் கோடைகால வசிப்பிடமாக இவ்வூர் இருந்தது என்பதற்கும் அரச பிரதானி ஒருவரின் மாளிகை இருந்த இடங்கள் இப்போதும் அமைச்சர்பிட்டி என வழங்கப்பட்டு வருதையும் கடந்த நூற்றாண்டு வரையும் இறந்த வன்னியரசர்கள், போடியார்கள் நினைவான நடுகற்கள் நாட்டும் வழக்கமும் இக்கிராமத்தில் இருந்து வந்திருக்கும் சிறப்பை அவதானிக்கலாம்.



எல்லாவற்றுக்கும் மேலாக கண்டி இராட்சியத்திற்கும் பழுகாமத்திற்கும் நீண்ட தொடர்புகளுக்கு சான்றாக கண்டிக்கு செல்லும் பாதை “கண்டி அதர்” எனவும் பழுகாமத்திற்கு “சிங்காரக்கண்டி ” என்ற சிறப்பு பெயரும் வழக்கத்தில் இருப்பதை காணலாம்.



பழுகாமம் மற்றும் திரோபதை அம்மன் ஆலய தீமிதிப்பு ஆகியவற்றின் கீர்த்திக்கு மேற்குறித்த பதிவு ஒன்று மட்டுமே போதுமானது.

இடலியும், மட்டக்களப்பு (சம்மாந்துறை) வன்னிமை குமார பண்டாரமும், பாணமை வன்னிமை சமரவாகுவும் கூட கலந்துகொண்டிருக்கிறார்கள்.

பழுகாமம்-1, பழுகாமம்-2, வீரன்சேனை, வன்னிநகர், மாவேற்குடா, விபுலானந்தபுரம் என்ற பிரதேசங்களை தன்னுள் உள்ளடக்கிய இக்கிராமத்திற்கான

## மட்டக்களப்பு வன்னிமையை கொன்ற பழுகாமம் வன்னிமை

பண்டைய பழுகாமத்தில் மாகோனின் வன்னிமைகள் பழுகாமத்தை மையப்படுத்தி ஆட்சியிருக்கைகளை அமைத்திருந்ததான செய்திகள் வரலாற்றில் பதிவு செய்யப்படுகின்றன.

எஸ். ஓ. கனகரெத்தினம் தன் நூலில் ஒரு குறிப்பொன்றைத் தந்திருக்கிறார். பழுகாம ஆற்றில் (மட்டக்களப்பு வாவி)

விசாரணையின் முடிவில் பழுகாமம் மற்றும் போரதீவு வன்னிமைகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டு, எதிர்காலத்தில் இது நிகழக்கூடாது என்று எச்சரித்து அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஆனால் 1614இல் பழுகாம வன்னிமைக்கும் மட்டக்களப்பு (சம்மாந்துறை) வன்னிமைக்கும் சண்டை வந்திருக்கிறது. போரில் சம்மாந்துறை வன்னிமை கொல்லப்பட, பழுகாம வன்னிமை

நாமம் “பழு” என்பது பழுத்த அல்லது விளைந்த எனும் பொருளையும் “கமம்” என்பது விளைநிலம் எனும் பெருளையும் குறித்து நிற்பதால் “பழுகமம்” எனவும் அது பின்னர் மருவி பழுகாமம் எனவும் அழைக்கப்பட்டதாக க. செபரெத்தினம் கூறும் தகவல்களும் ஆதியில் “பழு” என்னும் வேட்டுவத்தலைவன் வழ்ந்ததால் “பழுகாமம்” என வழங்கப்பட்டதாகவும் இரு வேறு கதைகள் ஊர் பெயர் சார்ந்து கூறப்படுகின்றன.

திரௌபதி அம்மன் கோவிலை விடப் பழைமையான மாவேற்குடாப் பிள்ளையார், சிவமுத்து மாரியம்மன், வேம்படி நாகதம்பிரான், பத்திரகாளி அம்மன், சுடலை வைரவர், சிவன்,

## கண்டி மன்னனின் கோடைக்கால வதிவிடம்

கண்ணன், மாவேற்குடாப் பிள்ளையார், கேணிக்கரைப் பிள்ளையார், ஏரிக்கரைப் பிள்ளையார், வெள்ளிமலைப் பிள்ளையார், சித்தரவேலாயுதர் என 18 க்கு மேற்பட்ட இந்து ஆலயங்களும். மூன்று கிறிஸ்தவ தேவாலயங்களும் காணப்படும் இக்கிராமத்தில் விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி என்பன பாரம்பரிய தொழில்கள் ஆகின்றன.

கல்வியில் மிகவும் முன்னேற்றம் கண்டு, கல்வியாளர்கள் நிறைந்து காணப்படும் இக்கிராமத்தில் ஆரம்பத்தில் சைவப்பள்ளி என அழைக்கப்பட்டு பின்னர் கல்வி வளர்ச்சியை முன்னேற்ற அமரர்



கண்டுமணி அவர்களால் வித்தியாலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலை கண்டுமணி மகா வித்தியாலயம் என அதை தாபித்தவர் பெயராலேயே அழைக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் விபுலானந்த வித்தியாலயம், மாவேற்குடா வித்தியாலயம் என பல பாடசாலைகள் இக் கிராமத்தின் கல்வித் தாகத்தை தீர்ப்தோடு விபுலானந்த சிறுவர் இல்லம், திலகவதியார் மகளிர் இல்லம், அறிவுச்சோலை போன்ற சிறுவர் இல்லங்கள் பழுகாமத்தின் சிறப்புகள் விரிந்துகொண்டே செல்கின்றன.

நாம் யாரையாவது வாழ்த்தும்போது, “ உன் பக்கத்துவீட்டு பார்த்திபன், தக்கபடி வாழ முடியாமல் அகால மரணம் அடைந்ததைப் போல் சாகாமல், நீ இப்போதும் இளமையுடன் இருப்பதை வியந்து பாராட்டுகிறேன்“ என்று வாழ்த்துவோமா? அப்படி வாழ்த்துவது சரியா? தகுமா? நல்ல பண்பாடா? இல்லையல்லவா.

ஆனால் நமது இலங்கைத் திருநாட்டில் அப்படித்தானே நடக்கிறது!

மூலப்பாடலில் இருந்த சிலவரிகளை நீக்கிவிட்டுப் பொருத்தமான வரிகளை மட்டுமே தெரிவுசெய்து தமிழத்தாய் வாழ்த்தாக மாற்றினார். அதுதான் இப்போதுவரை தமிழகத்தில் பாடப்பட்டு வருகிறது. அந்தத் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் இதுதான்:



திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறும் திலகமுமே!
அத்திலக வாசனைபோல்
அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெரும் தமிழணங்கே!
பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்து துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும்

“எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே..“ என்று வருகிறதே. அப்படியானால் இப்போது தமிழின் புகழ் மணக்கவில்லை, அது மங்கிப் போய்விட்டது என்றுதானே பொருள். மாபெரும் தமிழறிஞரான கருணாநிதி அவர்கள் சிலவேளை எதிர்காலத் தமிழ்நாட்டில் தமிழின் நிலைமையை அப்போதே நினைத்துக்கொண்டு அந்த வரியை அனுமதித்தாரோ தெரியவில்லை. ஆனால், மொழிக்காக உயிர்கொடுத்த இனம் என்று உலகம் போற்றுகின்ற

# தமிழ்த்தாய் வாழ்த்தும், தமிழ்மொழி வாழ்த்தும்! தமிழர்களே சிந்தியுங்கள்!

– – சட்டத்தரணி, பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா – –

பாடசாலைகளிலும், மற்றும் இடங்களிலும் நடைபெறும் விழாக்களில் தமிழ் மொழி வாழ்த்து பாடப்படுவது வழக்கம். காலங்காலமாக, “ வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி வாழிய வாழியவே“ என்று தொடங்கும், பாரதியாரின் அழகான பாடல்தான் பாடப்பட்டு வந்தது.

ஆனால் இப்போது, இப்போது மனோன்மணியம் பெ.சுந்தரம்பிள்ளை என்ற தமிழறிஞர் எழுதிய “நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்“ என்று தொடங்கும் பாடல் தமிழ்த்தாய் வாழ்த்து என்ற பெயரில், பாடப்படுகிறது.

கடந்த வருடம் மட்டக்களப்பின் பிரபலமான பாடசாலை ஒன்றின் மண்டபத்தில் நடைபெற்ற ஒரு விழாவில் முதன்முதலாக அதனைக் கேட்டபொழுது எனது நெஞ்சில் தாங்க முடியாத வலி ஏற்பட்டது. இது எப்போது நுழைந்தது? ஏன் இதனைப் பாடுகிறார்கள்? யார் இந்த வழக்கத்தைப் புகுத்தினார்கள்? ஏன் இதுவரை எவருமே இதுபற்றி எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருக்கிறார்கள்? என்ற கேள்விகள் எல்லாம் என்மனதில் எழுந்தன.

கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சரான தனது முதலாவது பதவிக்காலத்தில், மனோன்மணியம் பெ.சுந்தரம்பிள்ளை அவர்களது இந்தப் பாடலைத் தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக சட்டரீதியாக ஏற்றுக்கொண்டு தமிழகத்தில் பாடசாலைகளிலும், வைபவங்களிலும் பாடப்படுவதை அதிகாரபூர்வமாகினார். அவ்வாறு அவர் செய்தபோது அந்த

தமிழ் தாய் வாழ்த்து:
--------------------------------------
நீராரும் கடலுடுத்த நிலமடந்தை
கெழிலொழுகும்...
சீராரும் வதனமெனத் திகழ் பாரதக்
கண்டமிதில்...
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல்
திரு நாடும்...
தக்கசிறு பிறை நுதலும் தரித்தநறும்
திலகமுமே...
அத்திலக வாசனை போல்
அனைத்துலகும் இன்பமுற...
எத்திசையும் புகழ் மணக்க இருந்த
பெரும் தமிழணங்கே!!!
தமிழணங்கே!!!
உன் சீரிளமை திறம் வியந்து செயல்
மறந்து வாழ்த்துதுமே!!!
வாழ்த்துதுமே!!!
வாழ்த்துதுமே!!!

ஆனால், எல்லாவற்றுக்கும் குருட்டுத்தனமாகத் தமிழகத்தைப் பின்பற்றுவதைப் போல இப்போது இந்தப்பாடலைப் பாடுவதும் இலங்கையில் பின்பற்றப்பட்டு விட்டது. சரி பரவாயில்லை. நல்லதுதானே என்று எடுக்க முடியாதுள்ளது. ஏனென்றால் இலங்கையில் மனோன்மணியனாரின் முழுப்பாடலும் பாடப்படுகிறது.

அந்தப்பாடல் இதுதான்:

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்
கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக்
கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல்
கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்றுபல
வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து
சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து
வாழ்த்துதுமே!

அறிவுபூர்வமாகச் சிந்திக்கக்கூடிய, பண்பாடுள்ள எவராவது, இந்தப்பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்தாகப் பாடுவதை அறிமுகப்படுத்தியிருப்பாரா, என்று கேட்கத்தோன்றுகிறது. பாடுபவர்கள்கூட ஏன் கவனம் செலுத்தாமல் இருக்கிறார்கள் என்பது வியப்பாக இருக்கிறது. கவலையைத் தருகிறது.

கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு ஆகிய மொழிகள் உன்னிடம் இருந்து பிறந்திருந்தும்கூட நீ சிதைந்து போகாமலும், உலகத்தில் வாழமுடியாமல் வடமொழி அழிந்ததுபோல நீ அழிந்துவிடாமலும் இளமையோடு இருக்கின்ற உனது திறமையை வியந்து வாழ்த்துகின்றோம் என்ற கருத்துள்ள வரிகளை, நமது மொழியை வாழ்த்தும்போது பாடுவது தவறல்லவா. மற்றொருமொழி, அதுவும் தமிழுக்கு நிகராகக் கோலோச்சிய மூத்த மொழி அழிந்ததைச் சொல்லியா நமது மொழியை நாம் போற்ற வேண்டும்? இதனைக் கருத்தில் கொண்டுதானே கலைஞர் கருணாநிதி இந்த வரிகளை நீக்கியிருக்கிறார்.

அதுமட்டுமா, அவர் நீக்காத ஒருவரியும் தவறாகத்தானே உள்ளது.

இலங்கைத் தமிழ் இனம், “எத்திசையும் புகழ்மணக்க இருக்கும் எங்கள் தமிழணங்கே“ என்றல்லவா பாடவேண்டும்.

எதுவுமே தேவையில்லையே, ஒருவரின் பாடலைத் திருத்தவும் தேவையில்லை, சிதைக்கவும் தேவையில்லை, மற்ற மொழிகளைப் பழிக்கவும் தேவையில்லை, இடையிலே வந்த இந்த வழக்கத்தைத் தொடரவும் தேவையில்லை. தமிழ்மொழியும், தமிழ்த்தாயும் வேறு வேறல்ல. தமிழ் மொழியைத்தான் தமிழ்த்தாய் என்கிறோம். அப்படியிருக்கும்போது தனித்தனியாகத் தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ்மொழி வாழ்த்து என்று இரண்டு எதற்கு? மகாகவி பாரதியாரின் பாடலைப் பாடியே தமிழ்மொழியை வாழ்த்துவோம். பண்பாடுள்ள தமிழராய் வாழ்வோம். சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கருத்தில் கொள்ளுங்கள்.

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

## கார் வோஸ்




மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்களுக்கு கடந்த வருடங்களில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களையும், இவ்வருடம் தெரிவு செய்யப்படவிருக்கும் மாணவர்களையும் உள்ளடக்கிய “கல்வி ஊக்குவிப்பு ஒன்றியம்“ எனும் அமைப்பால் வருடா வருடம் நடாத்தப்படும் CAR WASH எனும் நிகழ்வு எதிர்வரும் *07/04/2018* சனிக்கிழமையன்று ஜீவி வைத்தியசாலைக்கு முன்னால் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் மூலம் திரட்டப்படும் நிதியானது வறிய பிரதேங்களில் வாழும் மாணவர்களின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக தம்மால் பயன்படுத்தப்படவுள்ளதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரும் கலந்துகொண்டு தங்கள் வாகனங்களைக் கழுவிக்கொள்வதுடன், வறிய பிரதேங்களில் வாழும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு உதவிகளை வழங்குமாறும் அவர்கள் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றனர்.

**நேரம்:**
**காலை 8:00 – 5:00 மாலை**




வாகனங்களை கழுவுவதற்கான கட்டணம்:

கார் - 300 ரூபாய்கள்

முச்சக்கர வண்டி - 200 ரூபாய்கள்

மோட்டார் சைக்கிள் - 100 ரூபாய்கள்



# சித்திரை புதுவருடத்தை முன்னிட்ட பாரம்பரிய உணவுப் பொருள் கண்காட்சியும் விற்பனையும்

மட்டக்களப்பில் பாரம்பரிய உணவுப்பொருட்களை தயாரித்து விற்பனை செய்யும் தயாரிப்பாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் கன்காட்சி மற்றும் விற்பனை நிகழ்வு ஒன்று ஏப்ரல் 11, 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் சிட்டி செண்டர் நிறுவனத்தில் நடக்கவிருக்கின்றது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்படும் இந்த நிகழ்வுக்கான அனுசரணையை சிட்டி செண்டர் நிறுவனம் வழங்குகின்றது.

பெண்கள் மற்றும் இளைஞர் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கவும், அவர்களே தமது வாடிக்கையாளர்களை தேடிக்கொள்ள வழி செய்யவுமாக தமது அதிகார சபை பலவிதமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறுகின்ற, தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தி அதிகாரியான திருமதி. கீதா சுதாகரன், அதன் ஒரு அங்கமாக மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக சம்மேளனத்தின் ஒத்துழைப்பில் சிட்டி செண்டர் நிறுவனத்தின் அனுசரணையில் தாம் இந்த கண்காட்சி மற்றும் விற்பனை நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளதாக கூறுகின்றார்.

சிறிய தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பாரம்பரிய உணவு தயாரிப்பாளரை ஊக்குவிக்கும் நோக்கிலேயே தாம் இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாக கூறுகின்றார் சிட்டி செண்டர் நிறுவத்தின் தலைவரான





ஏ. எல். எம். ஆரி.்.ப்.

இந்த விற்பனைக் கண்காட்சியில் மட்டக்களப்பில் பல இடங்களை சேர்ந்த 7 உணவுத் தயாரிப்பாளர்கள் கலந்துகொள்வதாக கீதா தெரிவித்தார்.

இவர்கள் மிகுந்த சுகாதாரத்துடன், சுவையாக இந்த உணவுகளை தயாரிப்பதை தாம் கவனித்ததாக ஆரி.்.ப் கூறுகிறார்.

சித்திரை புத்தாண்டு தினத்தை முன்னிட்ட கொள்வனவுகளுக்காக மட்டக்களப்பு நகர மையத்தை நாடிவரும் வாடிக்கையாளர்களுக்கு இவர்களின் உணவுப் பொருட்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

புதிய முதலீட்டாளர்களுக்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்துவதுடன் எமது பாரம்பரிய உணவுகளை சந்தைப்படுத்தவும் இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைய “அரங்கம்” இவர்களை வாழ்த்துகிறது.

# புலியைத் தாக்கிவிட்டு செல்ஃபி எடுத்த வீரப் பெண்









புலியை முறத்தால் அடித்த பெண்ணை கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒரு குச்சியைக் கொண்டு புலி ஒன்றுடன் போராடி உயிர் தப்பியிருக்கிறார் ஒரு இந்திய இளம் பெண்.

மகாராஷ்டிர மாநிலத்தின் மேற்குப் பகுதியிலுள்ள தனது வீட்டில் இருந்த 23 வயதான ருபாலி மேஷ்ராம் ஆடு கத்துவதை கேட்டு வெளியே ஓடி வந்து பார்த்தபோது ஒரு புலி தனது ஆட்டை தாக்குவதை பார்த்திருக்கிறார்.

உடனே ஒரு தடியை எடுத்து அந்தப் புலியோடு சண்டையிட்டுள்ளார். பதிலுக்கு அந்தப் புலியும் அவரையும் தாக்கியுள்ளது. அப்போது, அவரது தாய் ருபாலியை வீட்டுக்குள் இழுத்துக் காப்பாற்றியுள்ளார். அதனால், தாய்க்கும் காயம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் புலித் தாக்குதலில் மிகச் சிறிய காயங்கள் மட்டுமே இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இருவரும் தற்போது மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பியுள்ளனர். ஆனால், அந்த ஆடு இறந்து விட்டது. அதனைக் காப்பாற்ற முடியவில்லை.

புலி தாக்குதல் நடைபெற்ற பின்னர், இரத்தம் வடிந்த முகத்தோடு ருபாலி மேஷ்ராம் செல்.்.பி எடுத்துள்ளார், கடந்த வாரம் நடந்த இந்தச் சம்பவம் தற்போதுதான் வெளியே தெரிய வந்துள்ளது.

புலியோடு சண்டையிட்ட ருபாலி மேஷ்ராமின் துணிச்சலை சிகிச்சை அளித்த மருத்துவர் புகழ்ந்துள்ளார்.

அந்த புலியால் கடிபடாமல் தப்பித்தது ருபாலி மேஷ்ராமின் அதிஷ்டம் என்றும் அவர் கூறியுள்ளார்.

ருபாலி மேஷ்ராமின் தலை, மணிக்கட்டு, கால்கள் மற்றும் கைகளில் காயங்கள் ஏற்பட்டிருந்தன. ஆனால் அவை சிறிய காயங்களே. அவர் முழுமையாகக் குணமடைந்துள்ளார்.

தலையில் ஏற்பட்டிருந்த காயத்தால் அவருக்கு சி.ரி ஸ்கேன் செய்யப்பட்டு, கண்காணிப்பில் இருந்து வந்தார்.

”எனது மகள் இறந்துவிடுவார் என்று நான் எண்ணினேன்” என்று அவருடைய தாய் ஜிஜா பாய் பிபிசியிடம் தெரிவித்தார்.

தடியால் அடித்து புலியை விரட்ட முயன்று இரத்த காயம்பட்ட மகளைப் பார்த்து அதிர்ச்சி அடைந்ததாகவும் அவர் கூறினார்.

புலியிடம் இருந்து தங்களைப் பாதுகாக்க வனக் காவலர் ஒருவரை அழைத்ததாக அவர்கள் கூறினர். ஆனால், 30 நிமிடங்களுக்கு பின்னர் அவர் வருவதற்கு முன்னரே புலி அவ்விடத்தை விட்டு சென்றுவிட்டது.

வன விலங்கு பூங்கா ஒன்று அருகில் இருப்பதால், இந்த கிராமத்திற்கு வன விலங்குகள் அடிக்கடி வருகின்றன.

# சீனா கண்டுபிடித்த புதிய நான்கு விடயங்கள்?









சீனா புதிதாக கண்டுபிடித்த நான்கு விடயங்கள் என்ன? என்று யாராவது கேட்டால், இப்போதெல்லாம் "அதிவேக ரயில், கைபேசி மூலமான பணம் செலுத்தும் வசதி, ஈ-வணிகம் மற்றும் சைக்கிள் பகிர்தல் ( இது கிட்டத்தட்ட சைக்கிளை வாடகைக்கு எடுப்பது போலத்தான் ஆனால், ஒரே இடத்தில் திரும்பித்தர வேண்டியதில்லை போகு இடத்தில் சேர்த்துவிட்டு போகலாம்) என்று கூறுகிறார்களாம்.

இப்படி கூறுவதை சீனாவும் விரும்புகிறது. ஆனால், அது தவறான தகவலாம். ஏனென்றால் இவற்றை கண்டு பிடித்தது வெவ்வேறு நாடுகள்தான். ஆனால், சீனா இவற்றை இன்றுவரை பரந்துபட்ட அளவில் விரிவாக அமுல்படுத்துகிறது. அல்லது பயன்படுத்துகிறது.

உண்மையில் 2017ஆம் ஆண்டும் மே மாதத்தில் இருந்துதான் இந்த விடயம் பேசப்படுகிறது. அதாவது பீஜிங் வெளிநாட்டு கற்கைகளுக்கான பல்கலைக்கழக ஆய்வு ஒன்று "மீண்டும் நீங்கள் பயன்படுத்த நினைக்கும் சீனாவில் உள்ள வசதிகள் என்ன?" என்ற ஒரு கேள்வியை 20 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களிடம் கேட்டிருக்கிறது. அவர்கள் சொன்ன பதில்தான் இந்த நான்கும்.

அதனை அப்படியே சீன அரசாங்கம் பிடித்துக்கொண்டுவிட்டது. சீனா கண்டுபிடித்த விடயங்கள் என்று அது மார்தட்டத் தொடங்கிவிட்டது.

சீனாவின் நான்கு புதிய கண்டுபிடிப்புக்கள் என்று சீன ஊடகமும் பறைசாற்றத் தொடங்கிவிட்டது.

உண்மையில் சீனாவின் மாபெரும் கண்டுபிடிப்புக்கள் என்று காகித தயாரிப்பு, வெடிமருந்து, அச்சு இயந்திரம் மற்றும் திசையறி கருவி ஆகியவற்றைத்தான் கூற வேண்டும்.

ஆனால், அண்மைக்காலமாக அவற்றை மறந்து இவற்றைக் கூறத்தொடங்கியிருக்கிறார்கள்.

சீனா தொழில்நுட்பத்தில் அதிக முன்னேற்றத்தை காண்கிறது என்ற வாதத்தை வலுப்படுத்தத்தான் இவையெல்லாம்.

உண்மையில் அதிவேக ரயில் என்றால் எது என்ற விடயமே கொஞ்சம் குழப்பமானதுதான். மணிக்கு 250 கிலோமீட்டருக்கு அதிகமாக போனால் அதிவேக ரயில் என்று கூறலாம் என்கிறார்கள். உலக ரயில் அமைப்பின் தகவலின் படி ஜப்பான் நாடுதான் முதலாவது அதிவேக ரயிலை ஓட்டியதாக கூறுகிறது.

சீனா தனது முதலாவது அதிவேக ரயிலை, 2008இல் அறிமுகம் செய்தது.

மோபைல் மூலமான பணம் கட்டுதல் 1997இல் பின்லாந்தில் ஆரம்பமானது. ஈ வணிகம் முதலில் வீடியோ டெக்ஸ் என்ற பெயரில் ஆங்கிலேயரால் செய்யப்பட்டது.

வெள்ளைச் சைக்கிள் திட்டம் என்ற பெயரில்1960 இல் அம்ஸ்ரடம் நகரில்தான் முதன் முதலில் சைக்கிள் பகிரும் திட்டம் அமுலுக்கு வந்தது.

அப்படியானால் எப்படி சீனா இவற்றை உரிமைகொண்டாட முடியும் என்ற கேள்வி எழலாம்.

பிபிசியில் இது குறித்து கட்டுரை ஒன்றை எழுதிய பிரக்டிக் ஐக்கார் என்பவர், இவற்றை சீனா பரவலாக பயன்படுத்துகிறது என்கிறார்.

சீனாவில் இப்போது இருபத்தையாயிரம் கிலோ மீட்டருக்கு அதிவேக ரயில் வலையமைப்பு உள்ளது. 2030இல் அதனை இரண்டு மடங்காக்க திட்டமிட்டுள்ளது.

அதுபோலத்தான் ஏனைய அனைத்து விடயங்களிலும் அது பரவலான பயன்பாட்டை கொண்டு இருக்கிறது. ஆகவே கண்டுபிடிக்காவிட்டாலும், அதிகம் பயன்படுத்தினால் நாம் கண்டுபிடிப்பாளராகி விடலாமோ?

**ஆதார தகவல்: பிபிசி**



# கண்ணூறு கழிக்கவோ, காகங்குருவி விரட்டவோ மட்டுமா வெருட்டி?

-- சி. ஜெயசங்கர் --



கத்தரி வெருளி எனும் வெருட்டி பற்றி பலரும் அறிந்திருப்பர். ஆயினும் இலத்திரனியல் ஊடகங்கள் காட்டும் உலகங்களில் வாழ்ந்திருப்போர் கவனத்தில் கத்தரி வெருளி எனும் வெருட்டி படாமல் போயிருப்பதும் ஆச்சரியமானதல்ல. எனினும் கத்தரி வெருளி எனும் வெருட்டி பேசும் பொருளும் பேசாப் பொருளும் மிகவும் ஆழமானவை.

இயற்கை படைப்பின் மனிதர் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமானவர். இரட்டையராயினும் ஒருவர் போல் இன்னொருவரைக் காணுவது அரிதானது. அவ்வாறே மனிதர் படைப்பான கத்தரி வெருளி எனும் வெருட்டியும் ஒன்றுபோல் இன்னொன்று காணப்படுவது சாத்தியமானதல்ல. கத்தரி வெருளி எனும் வெருட்டி பற்றிய இந்த விடயம் கவனத்தில் படாமலே போயிருப்பது அல்லது இதிலென்ன பெரிய விடயம் இருக்கிறது என்று நினைப்பதும் ஆச்சரியமானதல்ல.

ஆனால் கலை பற்றிய வரைவிலக்கணக்கப்படுத்தலுக்கு மிகவும் எளியதான ஒரு உதாரணமாகக் கொள்ளத்தக்கதும், உலகப்பண்பாட்டு மரபுகளில் காணப்படுவதும் குதூகலத்திற்கு உரியதுமான கத்தரிவெருளி எனும் வெருட்டி கலை ஆக்கத்திற்கான உதாரணமாகக் கொள்ளப்பட்டிருப்பதையும், கலை வரலாற்றை அறிந்தளவில் காணமுடியவில்லை. ஆயினும் உலகப் பெரும் பரப்பின் ஏதாவதொரு வெளியில் இது பற்றிய சிந்தனையிலிருந்துதான் காணப்படும். இது வேறு விடயம்.

கலை வரலாற்றில், கலை உருவாக்கம் பற்றிய சிந்தனையில் ஒன்றுபோல் மற்றொன்று காணமுடியாத கத்தரிவெருளி எனும் வெருட்டி கவனத்தில் கொள்ளப்படாது போயிருப்பதன் காரணங்கள் எவையாகத்தான் இருக்க முடியும்?

கலை உருவாக்கம் என்பது உயர்ந்தோர் ஆற்றல் அல்லது ஆக்கம் அது சாதாரணர்க்கு அப்பாற்பட்டது என்ற கருத்தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் தக்கவைப்பதற்காகவும் இருக்கலாம் அல்லது சாதாரணரது படைப்பாற்றல், சிந்தனைத்திறம், விமர்சன நோக்கு என்பதை மறுதலிப்பதற்காகவும் இருக்கலாம். ஏனெனில் கையில் எட்டியதைக் கொண்டு உருவாக்கப்படும் கத்தரி வெருளி எனும் வெருட்டிகள் சாதாரணர்களால் உருவாக்கப்படுபவை. இந்தக் கேலித்தனம் வெருட்டிகளை உருவாக்கப்படுபவர்கள் மீது அதிகாரம் செலுத்துபவர்களைப் பாவனை செய்பவையாக இருப்பதொன்றும் புதிரோ புதினமோ அல்ல என்பதும், விளங்கிக் கொள்ளப்பட வேண்டியது.

இந்நிலையில் ஒன்றுபோல் இன்னொன்று காணமுடியாத கத்தரி வெருளி எனும் வெருட்டிகள் கலையாக்கத்தின் வரைவிலக்கணங்களுக்குள் அமைந்து காணப்படினும் கலையாகக் கொண்டாடப்படாததன் காரணங்கள் சிந்தனைக்கும், உரையாடலுக்கும் உரியவை.

தனியாகவோ அல்லது சிறுகுழுவாகவோ இணைந்து கேலியும் கிண்டலுமாக இழைத்து உருவாக்கப்படும் கத்தரி வெருளி எனும் வெருட்டி என்பது வெறுமனே கண்ணூறு கழிப்பதற்கோ, காகம் குருவிகளை அச்சுறுத்துவதற்கோ மட்டுமல்ல. அதன் நுண்ணிதான இழை கேலித்தனத்துடனான ஆதிக்க எதிர்ப்பாகவும் இருக்கிறது என்பது கவனத்திற்கு உரியதாகிறது.

## எம் சொத்தாக..



நரக நீக்கம்

மூடிக்கட்டிய தாய்மார்கள்

மூடிக்கட்டிய சகோதரிகள்

மூடிக்கட்டிய பெண்குழந்தைகள்

எம் சொத்தாக....

திறந்துகாட்டும் விலைமாதர்கள்

திறந்துகாட்டும் விளம்பரதாரிகள்

திறந்துகாட்டும் நடிகைகள்

எம் சொத்தாக....

பண்பாடு கட்டும்

ஆதிக்கம் நீங்கும்

புத்தியும் செயலும் எமதாக

உணர்வும் செயலும் எமதாக

மனிதம் வளர மனிதம் வாழ

உயர்வு கொள்ளும் உலகம்

எமது சொர்க்கம்.



# பறிபோகும் எமது நிலம் பதறுகின்ற தமிழினம்

கடந்த 2010ஆம் ஆண்டளவிலிருந்து கபளீகரம் பண்ணப்பட்ட எமது பாரம்பரிய நிலங்களின் விபரப்பட்டியல்

கிழக்கு மாகாணத்தில் இயற்கை பொருளாதார வளம் மிக்க காணிகள் அரச அபிவிருத்திப் பணிக்கென சுவீகரிக்கப்பட்டு தனியாருக்கு வழங்கப்பட்டது தொடர்பான விபரம்.




-- நன்றி: வீரகேசரி 15.08.2010 --



| இல | காணி அமைவிடம் | யாருக்கு | காணிகளின் அளவு |
|---|---|---|---|
| 01 | திருகோணமலை இறக்காக்கண்டி இருந்து புடவைக்கட்டு வரையான கடற்கரைப்பகுதி | சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக சுவீகரிக்கப்பட்டு வெளியாருக்கு கொடுக்கப்படுகிறது | 1500 ஏக்கர் |
| 02 | திருகோணமலை குச்சவெளி பரதேச செயலக பிரிவிலுள்ள காணிகள். | பெரும்பான்மை இனத்தவர்களுக்கு உப்பு உற்பத்தி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ளது. | 1400 ஏக்கர் |
| 03 | மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவில் உள்ள சின்ன புல்லுமலை முருகன் கோயில் முன் வீதி பக்கம் உள்ள மலை | வீதி அபிவிருத்தி பணியில் ஈடுபடும் சீன கம்பனிக்கு வழங்கப்படவுள்ளது. | 03 ஏக்கர் |
| 04 | திருகோணமலை சைவ சமய புனித பிரதேசமாக கருதப்படும் கன்னியா வெண்ணீர் ஊற்று பகுதி | பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளது | - |
| 05 | மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேசத்திலுள்ள 212 சீ கிராம உத்தியோகத்தர் பிரிவு பெரிய தீவு, சல்லித்தீவு, பனிச்சங்கேணி ஆகிய பகுதிகள். | உயிரியல் ஆய்வு மையம் அமைப்பதற்காக அரசு பெற்று தற்போது உல்லாச விடுதிகள் கட்டுவதற்கு பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்டுகின்றன. | - |
| 06 | மட்டக்களப்பு வவுனதீவு பிரதேச செயலகப்பிரிவிலுள்ள கண்டியன் குளம் கால்நடைக்குரிய மேச்சல் தரை | ஈரான் கம்பனிக்கு அன்னாசி பழச்செய்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது | 1000 ஏக்கர் |
| 07 | திருகோணமலை ஈச்சிலம்பற்று பிரதேச செயலகப்பிரிவிலுள்ள சோமாவதி புனித பிரதேசத்தில் இருந்து சேருவில புனித பிரதேசம் வரை அடர்ந்த காடுகளான பகுதி | வீதிகள் அமைக்கப்பட்டு இரு மருங்கிலும் மீள் குடியேற்றம் என்ற பெயரில் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன | - |
| 08 | திருகோணமலை கந்தளாய் பிரதேச செயலக பிரிவிலுள்ள கந்தளாய் பகுதி | பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது | 15000 ஏக்கர் |
| 09 | மட்டக்களப்பு மாவட்ட கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலகப்பிரிவில் புணானை கிராமத்தில் வாழைச்சேனை காகித ஆலைக்கு சொந்தமான பகுதி | மகாவலி அபிவிருத்தி போர்வையில் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது | 1500 ஏக்கர் |
| 10 | மட்டக்களப்பு மாவட்ட கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள காயங்கேணி, பனிச்சங்கேணி ஆகிய பகுதிகள் | பெரும்பான்மை இனத்தவர்களுக்கு இறால் வளர்ப்புக்கு வழங்கப்பட்டுள்ளது | 300 ஏக்கர் |
| 11 | மட்டக்களப்பு மாவட்ட கோரளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சுங்கான்கேணி பகுதி | பெரும்பான்மை இனத்தவர்களுக்கு இறால் வளர்ப்புக்கு வழங்கப்பட்டுள்ளது | 50 ஏக்கர் |
| 12 | மட்டக்களப்பு மாவட்ட மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சேத்துக்குடா பகுதி | பெரும்பான்மை இனத்தவர்களுக்கு இறால் வளர்ப்புக்கு வழங்கப்பட்டுள்ளது | 50 ஏக்கர் |
| 13 | மட்டக்களப்பு மாவட்ட மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவின் நகரை அண்டிய பகுதியான முகத்துவாரம் பாலமீன்மடு கல்லடி இவைகள் மீன்பிடிக்காக ஒதுக்கப்பட்ட பகுதிகளாகும் இப்பகுதிகளில் அரச தனியார் காணிகள் | வேளிநாட்டு நிறுவனங்களுக்கு ஐந்து நட்சத்திரக் ஹோட்டல்கள் கட்டுவதற்கு வழங்கப்பட்டுள்ளது | - |
| 14 | மட்டக்களப்பு மாவட்ட பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் மண்முனைத்துறைப் பகுதியில் உள்ள தீவு பறவைகளின் சரணாலயமாகவும் மீன்களின் இனவிருத்திக்கான மண்முனைத்துறையினை நோக்கி வெள்ளம் போவதை தடுக்கம் மேடாக இருக்கின்ற இடங்கள் | வெளிநாட்டு கம்பனி ஒன்றுக்கு நீண்டகால குத்தகைக்கு கொடுத்து அதில் ஐந்து நட்சத்திரக் ஹோட்டல்கள் கட்டுவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது | - |
| 15 | மட்டக்களப்பு மாவட்ட கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள எல்லைக் கிராமமான 213சி கிராம உத்தியோகத்தர் பிரிவை சேர்ந்த தோணிதாண்ட மடு புச்சாக்கேணி பிரதேசக்காணிகள் பொலநறுவை மாவட்டத்துடன் இனைக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது | | - |
| 16 | மட்டக்களப்பு மாவட்ட பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் கெவிளியாமடு கச்சக்கொடிச்சேனை சுவாமிமலை போன்ற பகுதி | 350 பெரும்பான்மை இனத்தவர்கள் அத்தமீறி குடியேறியுள்ளனர் | - |
| 17 | அம்பாறை பொத்துவில் வேகாமத்தில் 1956 ஆண்டு அப்போதைய மட்டக்களப்பு அரச அதிபரால் விவசாயம் செய்வதற்கு வழங்கப்பட்டது. | வன இலாக்காவினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது | 1900 ஏக்கர் |

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 07 ~~ தமிழ்க்கவி ~~--

சமளங்குளம் எங்கட அயல் கிராமம் அந்தக்குளத்தை சமணர்கள் கட்டினார்களோ தெரியாது. ஆனால் அந்தக் குளத்தின் மேற்கு கரையில ஒரு சமணர்களின் வழிபாட்டுத்தலமொன்று இடிந்து மண்மேடாகக் கிடந்தது. இந்த சமளங்குளத்தின்ர வான் கட்டால வான் பாயத் துவங்கினா அங்கால உள்ள அஞ்சாறு கிராமத்துச்சனம் தண்ணி வடியுந்தனைக்கும் இஞ்சால வர ஏலாது.

எவ்வளவோ கஸ்டப்பட்டு சனம் படுற பாட்டைக்கண்டு அந்தக்குளத்துக்கு ஒரு கலிங்கு கட்ட அரசாங்கம் முடிவெடுத்துது. அதைக்கட்டுற கொந்தராத்துக்காரனா ஊருக்கை வந்தவன்தான் தடியன். அவரை முசுலீம் எண்டுதான் சனம் நினைச்சது. ஆனா அவன் முசுலீம் இல்லை. அதுக்காக கிறிஸ்தவனும் இல்லை. அப்ப சைவமெண்டா அதுகும் இல்லை. அப்ப கொம்மியூனிஸ்ட் எண்டா அதுகும் இல்லை. ஏனெண்டா அவன் பிள்ளையார்கோவில்; பொங்கலும் செய்வான். குளக்கட்டுக் குருசுமரத்துக்கும் பொங்குவான். மசூதிக்குப்போறதோ தொழுகிறதோ கிடையாது.

சரி குளத்துக்கு கலிங்கு கட்டவந்தவன் தன்ர சீமெந்துப்பைகளையும் வேலையாக்களையும் தங்க வைக்க ஒரு வாடி போட இடந்தேடினான் அப்பைக்கதான் கட்டை வேலுப்பிள்ளையர் தன்ர காணிக்க இடங் குடுத்தவர். அவன் தன்பாட்டில ஒரு கொட்டிலைப்போட்டான். அவனோட கூட வேலை செய்ய வந்தவை பெரும்பாலும் மட்டக்களப்பு இளந்தாரியள்தான். அவனும் மட்டக்களப்பான்தான். தொந்தி பருத்த உடல் செக்கச்சிவந்த மேன, முன்னந்தலை உச்சியில ஒரு உள்ளங்கையளவு சொட்டை, அது போக சுருண்ட இருண்ட முடி. ஒரு பத்து வரியம் முன்னா பாத்திருந்தா பேரழகனாத்தான் இருந்திருப்பான்.

வேலுப்பிள்ளையர் அவனுக்கான சமையலையும் மனிசிக்காறியக் கொண்டு செய்விச்சார். அவர் வாடி போட இடங் கொடுத்ததோட எல்லாத்திலயும் விட்டுக் கொடுத்ததால தடியன், ஒரு சின்னவீட்ட கலிங்குகட்ட வந்த சீமெந்திலயே கட்டிவிட்டார். அந்தக் கலிங்கு வேலை செய்து கொண்டே அந்த வரியம் குளத்துக்கு கீழை ஒரு காணிய குத்தகைக்கு எடுத்து நெல்லு விதைச்சார்.

அடுத்த போகத்துக்கும் மேலும் ரெண்டு காணி எடுத்து நெல்லு விதைச்சார். அப்ப படிப்படியா விவசாயக்கூலிக்கு போற ஆக்களில பெருமளவானவைக்கு அவர்தான் வேலை குடுத்தார். அவரோட கலிங்கு கட்ட வந்த பொடியள் ஊருக்குப் போட்டாங்கள். அவர் மட்டும் வேலுப்பிள்ளையர் வீட்டில மட்டுமில்லாம தான் குத்தகைக்காணி எடுத்த எல்லார் வீட்டிலும் சங்காத்தம் வைச்சிருந்தார்.

இதில நான் அந்த ஊரைப்பற்றி சொல்லிப்போடவேணும். அது மதுரைதான் அந்த ஊரில எல்லா வீட்டிலும் பொம்பிளை ராசாங்கந்தான். வயல் விதைப்பிலயிருந்து தோட்டச்செய்கை வரைக்கும் வீட்டில பொம்பிளையள்தான் பாடுபடுவினம் ஆம்பிளையள் வாறகாசில குடிச்சு வெறிச்சு திரிவாங்கள்.

தடியன் இதை தனக்கான இடமா மாத்தினான். விளைவு முதல்முதல் இவன் காணிவாங்கி செய்த ராசம்மாக்காட மனிசன் திடீரெண்டு பொலிடோலைக் குடிச்சு செத்துப்போனான். சனம் அதை பெரிசா எடுக்கேல்ல அதை குடிவெறியில நடந்த தற்கொலையாத்தான் பாத்தினம். தடியன் செத்தவீட்டில கூட ஓடியோடி உதவினான். அடுத்ததா அவன் காணி எடுத்த பொம்பிளை புருசனை விட்டிட்டு இருந்தவள்தான். அவளுக்கு தலை நிமிந்த ஆம்பிளைப்பிள்ளை ஒருத்தன் இருந்தான் வயல் வேலையில நிக்காம அவன் ரவுணுக்க எங்கயோ கராச்சில வேலை செய்தான். அதுகும் தடியன்தான் எடுத்துக்குடுத்த வேலையெண்டு பின்னாளில தெரிய வந்துது.

அங்கசுத்தி இஞ்ச சுத்தி அவண்ட காதல் கதையள் அரசல்புரசலா அடிபடத் தொடங்கயுக்க, அவனுக்கு வயல்வேலை செய்ய போய் வந்து கொண்டிருந்த பொம்பிளைப்பிள்ளையொண்டு திடீரென்று நஞ்சு குடிச்சு செத்திட்டாள்.

அவளை காதலிச்ச பெடியன்தான் கராச்சில வேலை செய்தவன் அவனுக்கு ஏதோ வெளிச்சிட்டுது காதலியை இழந்த சோகம் இருக்க பிரேத பரிசோதனையில அந்தப்பிள்ளை கன்னிதான் எண்டும் தெரிய வந்திட்டுது அவனுக்கு தன்ர தாயில சந்தேகம். இவதான் அவளை ஏதும் பேசிக்கீசி...எண்டு. ஆனா அவன் அதுக்குப்பிறகு ரவுணுக்க வேலைக்குப் போகாம. வீட்டிலயே இருந்தான். இப்ப அவனும் இடைஞ்சலாப்போகவே அவனை கராச்சில கூப்பிட்டதாம் என்று தடியன் சொல்ல அவனும் புறப்பட்டுப்போனான். அங்கு போனபின்தான் தடியன் சொன்னது பொய் என தெரிந்தது.

அவன் திரும்பி வீட்டுக்கு வந்தான் ஆனால் வழியிலேயே அவனுக்கான வலை விரிச்சு வைச்சிருந்தார் தடியன்; ஆனால் கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தானே இடையில் சிநேகிதப்பெடியள் எதிர்ப்பட அவன் அவங்களோட வேறபக்கமா போட்டான்.. தடியன் இரவில் இவன் எண்டு நினைச்சு வேறு எவனையோதாக்க அவனும் சண்டியன் விடுறானோ கையிலிருந்த கத்தியால் தடியனின் வயிற்றைக்கிழிச்சிட்டான். அவனுடைய குடல் வெளியே பீற அதை அமுக்கியபடி வைத்தியசாலை பாத்து ஓடினான்.

ஏன்ன நினைத்தானோ மரணப்படுக்கையில் அவன் பாவமன்னிப்புக் கோருவதாக கூறி தனது பாவச்சுமையை அருகிலிருந்த வேலுப்பிள்ளையரிடமும் நண்பர்களிடமும் இறக்கிவைத்தான். திரும்பவும் தான் மட்டக்களப்புக்கு போகவே முடியாது என்று குமுறியழுதான். தான்தான் சாராயத்தில் மருந்து கலந்துகொடுத்து இருவரைக் கொன்றதையும் ஒப்புக்கொண்டான். ஒப்பற்ற பெருமைக்குரிய மண்ணிலிருந்து இப்பிடியொருத்தன் வந்திருப்பான் என்று யாராலும் ஒப்புக்கொள்ள முடியயேல்லை. அவனை பெரியாஸ்பத்திரிக்குசு ஏற்றினார்கள். முழுசா அஞ்சு வரியம் ஊருக்கை இருந்தவன். செத்தானோ இல்லையோ ஊரவர் யாரும் போய்ப்பார்க்கவேயில்லை.

# இந்தியாவில் மான் வேட்டையாடிய வழக்கில் இந்தி நடிகர் சல்மான்கானுக்கு சிறை



மானை வேட்டையாடிய வழக்கில், இந்தி திரைப்பட நடிகர் சல்மான் கானுக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் 10,000 ரூபாய் அபராதம் விதித்து இந்திய நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 20 ஆண்டுகளாக நடைபெற்று வந்த இந்த வழக்கில் ஜோத்பூர் நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது. தற்போது அவர் சிறைக்கு கொண்டு செல்லப்படுவார்.

தீர்ப்பை எதிர்த்து அவர் மேல் முறையீடும் செய்யலாம். ஆனால், தற்போது சில நாட்கள் சல்மான் சிறையில் இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் அரிய வகை மானான "கலைமானை" வேட்டையாடியதாக சல்மான் கானுடன் மேலும் 4 நடிகர் நடிகைகள் மீது 1998ஆம் ஆண்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது. □கலைமான்" என்பது பாதுகாக்கப்பட்ட ஒரு மான் இனமாகும்.

சல்மான் கானுடன் நடிகர் சயி.்.ப் அலி கான் மற்றும் நடிகைகள் சோனாலி பிந்த்ரே, தபு மற்றும் நீலம் ஆகியோருடைய பெயர்களும் இருந்தன. சல்மான் கானை குற்றவாளி என்று தீர்ப்பளித்துள்ள நீதிமன்றம், மற்ற நால்வரையும் விடுவித்துள்ளது.

"ஹம் சாத் ஹெய்ன் ஹெய்ன்" என்ற திரைப்படத்தின் படப்பிடிப்பிற்காக ஜோத்பூர் சென்றபோது இந்த சம்பவம் நடைபெற்றதாக என்று கூறப்படுகிறது.

தீர்ப்பு வரும் முன்பு பேசிய சல்மான் கானின் வழக்கறிஞர் ஹஸ்திமல், இது பொய் வழக்கு என்று தெரிவித்தார்.

### சல்மான் கானும் சர்ச்சைகளும்

---------------------------------------

2015-ஆம் ஆண்டில், நடைபாதைவாசி ஒருவர் மீது காரை ஓட்டி அவரைக் கொன்றுவிட்டு தப்பியோடியதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் தண்டனை பெற்ற சல்மான், பின்னர் மேல் முறையீட்டில் விடுதலை ஆனார்.

2016ஆம் ஆண்டு, இதே போன்ற மான் வேட்டையாடிய வழக்கில் கீழ் நீதிமன்றம் விதித்த தண்டைனையை எதிர்த்து சல்மான் தாக்கல் செய்தி வழக்கில், ராஜஸ்தான் உயர்நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது.

2016ல், தான் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண் போல் உணருவதாக பேசி பெரும் சர்ச்சையில் சிக்கினார் சல்மான். அதே நேர்காணலில் சல்மான் கான் தனக்கு உள்ள சிகரெட், மது, காபி ஆகிய கெட்ட பழக்கங்களை தன்னால் விட முடியும் ஆனால் பெண் துணையை மட்டும் விடுவது கடினம் எனத் தெரிவித்தது சமூக வலைதளங்களில் பரபரப்பை ஏற்படுத்தியது.

2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மானை வேட்டையாடச் செல்லும் போது உரிமம் இல்லாத துப்பாக்கியைப் பயன்படுத்தினார் என்ற வழக்கிலிருந்தும் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.



# வாழ்வு நெடுகக் கற்றல்

## தாகத்தின் வாசனை

-- சஞ்சயன் செல்லமாணிக்கம் --

முகப்புத்தகத்தில் ரூபன் சிவராஜா என்பவர் நேற்று ஒரு கவிதை எழுதியிருந்தார். அதை வாசித்தபின் மனது கொட்டித் தீர்த்த வார்த்தைகள்தான் இந்தப் பதிவு.

முதலில் கவிதையைப் பார்ப்போம்.

***************

அந்தப் பூச்செடி
பச்சையாய் என்னுள் படர்கிறது
உன் தொடுதலின் ஸ்பரிசத்தையும்
கண்ணின் ஒளியையும்
உதட்டில் உதிரும்
சொற்களின் குளுமையையும்
உறிஞ்சி
மீண்டும் மீண்டும்
துளிர்க்கிறது
கிளையாய் சடைக்கிறது
துளிவிதையில்
பெருங்காடொன்றை விரிக்கிறது
ஒற்றைச் செடி காடாகும்
விந்தை!

***************

இதுதான் ஒரு மனிதனுக்கான வாழ்வின் நிலத்தடி நீர்.

இதைவிட பேரின்ப வாழ்வேனும் உண்டா?

கனிவான பார்வைக்கு, இனிமையான வார்த்தைகளுக்கு, இன்னொரு மனிதனின் அன்பான ஸ்பரிசத்திற்கு ஏங்கும் மனிதர்களை நினைத்துப் பார்க்கிறேன்.

**உண்மையான வறுமை என்பது பணமற்ற நிலையல்ல**

ஒரு மனிதன் உயிர்ப்புடன் இருப்பதற்கு சுவாசமும் உணவும் போதுமானது அல்ல என்பதை வாழ்ந்த அனுபவமுள்ளவர்களால் புரிந்துகொள்ள முடியும். மனிதன் ஒரு சமூக மிருகம், அவனால் தனித்து வாழ்ந்துவிட முடிவதில்லை. இங்கு தனித்து எனப்படுவது இன்னொருவருடன் சேர்ந்து வாழ்வது என்று மட்டும் பொருள்படாது. இன்னொரு மனிதன் மீதான நட்பு, அன்பு, காதல், கருணை, கரிசனை என்று பலதையும் கொண்டது அது.

இந்த உலகில் அறுதி வறுமையானவர்கள் யார்? வருமானம் இல்லாதவர்கள் என்று மட்டும் வரையறுத்துவிடாதீர்கள். இவர்களுடன் ஒப்பிடுகையில் கனிவான பார்வைக்கு, இனிமையான வார்த்தைகளுக்கு, இன்னொரு மனிதனின் அன்பான ஸ்பரிசத்திற்கு ஏங்கும் மனிதர்களே மிகவும் கொடும் வறுமைக்கு உட்பட்டவர்கள். இந்த உலகில் இவர்களைவிட வறுமையாக வாழ்பவர்கள் வேறுயாரேனும் இருக்கமுடியுமா?

பசி, பிணி ஆகியவற்றிலும் கொடுமையானவை இவை. மற்றையவர்களின் வறுமையை பணம் ஈடுசெய்துவிடக்கூடும். ஆனால் இவர்களின் வறுமையை எது ஈடுசெய்யும்? இப்படியானதொரு நிலை எல்லா மனிதர்களின் வாழ்விலும் வந்துபோயிருக்கும். அதிஸ்டசாலிகள் அதனை கடந்துகொள்கிறார்கள். மற்றையவர்களை அது ஒரு பிறழ்வு நிலைக்கு தள்ளிப்போகிறது. பிறழ்வு நிலை மனமானது மன அயர்ச்சி, மன அழுத்தம், சுய இரக்கம், இயலாமை என்னும் ஒரு இருண்ட காலத்தினுள் இம்மனிதர்களை மூழ்கடிக்கும்போது இவற்றில் இருந்து விடுபட்டு மீள்வது இலகுவல்ல.

இன்று ரூபனின் கவிதையை வாசித்ததும் முதலில் நினைவிற்கு வந்தவர் கதிரவன். இவர்தான் யூமா வாசுகியின் "மஞ்சல் வெய்யில்" நாவலின் கதாநாயகன். தனது வேலைத்தலத்தில் உள்ள ஒரு பெண்ணைக் காதலிக்கிறார். அவளே அவரின் உயிர்ப்பான வாழ்வின் ஒரே ஒரு பாத்திரம். அவரின் நினைவு, கனவு எல்லாமே அவளாகவே இருக்கிறாள்.

**கனிவான பார்வையும், குளிர்மையான வார்த்தையும் எத்தனை எத்தனை மனக்காயங்களுக்கு களிம்பு தடவிவிடக்கூடியவை**

ஒருநாள் தனது காதலை அவர் அவளிடம் தெரிவித்துவிடுகிறார். அவள் அவரை தான் காதலிக்கவில்லை என்றுவிடுவாள்.

அதன்பின் அம்மனிதர் படும் வலி உயிரைப் பிழிவது போலிருக்கும். கதிரவனின் ஏக்கம், ஏமாற்றம், சுயபரிதாபம், கனவு, காமம், தனிமை, வாழ்வு மீதான வெறுப்பு, நிராசை என்பன எவ்வாறு அவனது உயிரின் உயிர்ப்பை உறிஞ்சிவிடுகின்றன என்பதை அத்தனை உணர்வுடன் எழுதியிருப்பார் யூமா வாசுகி. அவன் இறந்துபோகட்டும் என்று விரும்பினேன். அவளின் காதலுக்காய் அவன்பட்ட பாடு அத்தகையது.

"மஞ்சல் வெய்யில்" வாசித்தபின் சில நாட்கள் மனது கதிரவனின் பின்னாலேயே அலைந்துகொண்டிருந்தது. அவனின் நண்பனாக அவனை அணைத்து ஆறுதல் சொல்ல விரும்பினேன். அவனுக்கு நெருங்கிய நண்பர்கள் என்று யாரும் இருக்கவில்லை என்பதுதான் எல்லாவற்றிலும் கொடுமையானது.

ஒரு மனிதனை நாம் எதிர்கொள்ளும்போது கண்ணில் கனிவான பார்வையிருப்பின், உதட்டில் சொற்களின் குளிர்மையிருப்பின் அது மனிதர்களை உயிர்ப்பிக்கும் என்பதை நான் கூறித்தான் நீங்கள் அறியவேண்டியதில்லை.

கனிவான பார்வையும், குளிர்மையான வார்த்தையும் எத்தனை எத்தனை மனக்காயங்களுக்கு களிம்பு தடவிவிடக்கூடியவை என்பதை எம்மில் எத்தனை பேர் சிந்தித்து நடந்திருக்கிறோம், நடக்கிறோம்?

இதையே மனப்பிளவுகளுக்கு மருந்தாக உபயோகித்திருக்கிறோம்? எம்மால் ஏன் இன்னொரு மனிதனை அன்புடனும், குளிர்மையுடனும் அணுக முடியாதிருக்கிறது? இதுவும் ஒரு வறுமை நிலையல்லவா?

நானும் இவற்றை கடந்து வந்தவன்தான். காலம் பலதையும் கற்றுத்தந்திருந்தாலும் இப்போதும் தடக்கிவிழுந்தபடியேயே நடந்துகொண்டிருக்கிறேன். வாழ்வு நெடுக கற்றல் என்பது இதுதானோ?

# மட்டக்களப்பு மாநகரின் புதிய நகரபிதாவாக சரவணபவன்

தொடர்ச்சி

வாக்களித்துள்ளதாகக் தெரிகிறது.

கல்லடிப் பகுதியை சேர்ந்த சரவணபவனின் தந்தையாரான மறைந்த முன்னாள் பாடசாலை அதிபர் க.தியாகராஜா அவர்களும் மட்டக்களப்பு மாநகர சபையின் மேயராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்சி, இன, மத பேதமின்றி அனைவருக்கும் தான் பணியாற்றப் போவதாக சரவணபவன் அங்கு உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

இன்று சபை அமர்வின் இறுதியில் மாநகரசபைப் பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுவிட்டது. மட்டக்களப்பின் மிக முக்கியமான தேவையை இது கோடிகாட்டியது.

இது பற்றி புதிய மேயர் சரவணபவனிடம், அரங்கம் பத்திரிகையின் சார்பில் கேட்ட போது, தனது முதலாவது நடவடிக்கை, அடிக்கடி இருளில் மூழ்கும் மட்டக்களப்பு மாநகரத்துக்கு ஒளியூட்டுவதே என்றார்.

அதேவேளை மட்டக்களப்பின் கழிவகற்றல் பிரச்சினைக்கும் நிரந்தர தீர்வு காண முயற்சிப்பேன் என்றும் அவர் எம்மிடம் உறுதி கூறினார்.

இதற்காக அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுச் செயற்படுவேன் என்றும் அவர் உறுதி கூறினார்.



நன்றி சுபீட்சம் படங்கள்





# உயிரை விட அன்பானது தமிழ்

– –கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா– –

"பாடையிலே போகும் போதும் தமிழ் ஒலி கேட்க வேண்டும், ஓடையிலே என் சாம்பல் கரைக்கும் போதும் தமிழ் மணத்து ஓட வேண்டும்" என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.




நன்றி : Karthik Maruthan

உயிர் மட்டுமல்ல உடல் எரிந்த பின்பும் எஞ்சிய சாம்பலை கரைக்கும்போது கூட அந்தச்சாம்பலில் தமிழ் மணக்க வேண்டுமென்றால் உயிர், உடல் இவைகளுக்கும் மேலாக தமிழை நேசிக்கும் பக்குவமும், அதன் மீது தமிழர்கள் வைத்துள்ள ஆழமான பக்தி தென்படுகிறது அல்லவா?

மனதில் எந்த வாசனையை நினைத்துக் கொண்டு மணந்தாலும் அந்த வாசனையைத் தருகின்ற மனோரஞ்சித மலர் போன்று தமிழை எவ்வாறு போற்றினாலும் அவ்வாறு புகழ்பூக்கும் அழகே அழகு.

இந்த முதுமைச் சிறப்பு நம் தமிழ் மொழியைத் தவிர வேறு எந்த மொழிக்கும் கிடையவே கிடையாது.

"ஊன் ஊனோடு கலந்த உயிர் அந்த உயிரோடு கலந்த உயிர் மூச்சு-தமிழ்" தமிழின் பிறப்பை, அதன் தொன்மையை ஆராய்ந்துணர முற்பட்ட மொழி ஆய்வாளர் பலர், எவ்வகையிலும் எவ்வித வரையறையும் திட்டவட்டமாக கூறமுடியாமல் போனமைக்குத் தமிழ்மொழியின் பரந்துபட்ட செறிவும், வளமும், தனித்துவமும் ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம்.

"தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு தூய்கலை வானர்களும்

- இவள் என்று பிறந்தவள் என்று பிறந்தவள் என்றுணராதவராம்"

என்று அமரகவி பாரதியார் பாடுகிறார்.

இதை பாரதி மட்டுமல்ல நம் நாட்டுக் கவிஞர் நீலாவணன் கூட இப்படிச் சொல்கிறார்.

'என்று நீ பிறந்தாய் என உனையாரும் எழுதி வைத்திலர், இனி எழுதவும் ஒண்ணா, அன்று உனை வளர்த்த அருந்தமிழ்ப் பாவலர் அழிந்தனர் நீயோ அமர்ந்திருக்கிறாய்.'

சங்கத்தொட்டிலில் கிடந்து தங்கப் புலவர்களின் தாலாட்டில் வளர்ந்து, பொங்கும் இளமைப் பொலிவுடன், எங்கும் புகழ் ஓங்கிய எம்மினிய தமிழ்மொழியின் எல்லையற்ற பெரும்புகழை சொல்ல வார்த்தைகளே இல்லை எனலாம்.

ஈரடியில் குறளாம், நாலடியில் வெண்பாவாம், எட்டடியானால் விருத்தப்பாவாம் என்ன புதுமை... என்ன புதுமை......

இந்தத்தமிழை இன்பத்தமிழை போற்றிப்புகழ்வது மாத்திரமல்ல இதைப் பாதுகாப்பதற்கும் தங்கள் உயிரை இன்றுவரை எத்தனையோ பேர் தந்த வண்ணமே இருக்கிறார்கள்.

தமிழர்கள் சிறப்போடு வாழ்ந்தால்தான் தமிழ் சீரும் சிறப்புடன் வாளமுடியும் என்பதற்காக தங்களை வருத்தி உண்ணாவிரதமும் இருந்து உயிர் விட்டவர்களும், தங்கள் உயிர், உடல் என்பவைகளை தங்கத்தமிழுக்காக தாரை வார்க்கும் தமிழர்களும் இன்னும் நம்மத்தியில் மறத்தமிழர்களாக மறக்க முடியாத் தமிழர்களாக மிளிந்து கொண்டு இருக்கின்றார்கள்.

இவர்களுக்கெல்லாம் தங்கள் உயிரை, உடலை விட இன்பத்தமிழ் உயர்வாக இருப்பதால்தான் "தமிழுக்கும் அமுதென்றுபேர் அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாடினார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

அந்தத்தமிழுக்கு அமுதென்று மட்டுமல்ல தமிழுக்கு அன்பு என்றும் பொருளுண்டு.

தமிழ் ஒரு மொழியின் பெயர் மட்டுமன்று ஓர் உணர்வின் பெயருமாகும்.

"என்னை நன்றாய் இறைவன்



புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

படைத்தனன் தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறே" என்ற திருமந்திரம். இறைவன்-தன்னை-தமிழால் பாடும்படி படைத்தான் என்பதோடு தன்னை நன்றாய் அன்பு செய்யும்படியும் படைத்தான் என்று கூறுகிறது. அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர் மட்டுமல்ல இந்த உயிரையும் விட மேலானது, அன்பானது என்பதுதான் உண்மை.

## கடுகுக் கதை

– கலாபூசணம் . அரங்கம் இரா. தவராசா ஜே.பி –

# தொண்டனின் தொடரும் பணி...



குதுகலமாக கிரகப்பிரவேசம் நடைபெற்ற புதுவீடு இருவாரமாகி விட்டது.

அவ்வீட்டில் வசிக்கும் குடும்பம் தவிர
மற்றையோர் எல்லாம் கலைந்து விட்டார்கள்.

வீட்டின் உரிமையாளரின் அண்ணர் அவ்வீட்டிற்கு வருகை தந்தார்.

வாங்க பெரியப்பா என்று
களிப்போடு வரவேற்றாள் கவிதா.
என்னம்மா? பாடு தம்பி இருக்கானா?
இது பெரியப்பா தங்கத்துரை.
இல்ல பெரியப்பா அப்பா வேலைக்கு போயிற்றார்.

கவிதா தேநீர் வைத்தபடி பதில் சொன்னாள்.

சரி புள்ள இதென்ன வாசலில
காய்ந்து போன வாழை மரங்கள்
இன்னும் தூக்கி எறியல்லயா?

முழிவுசலத்துக்கு தலைவசலிலேயே
இன்னும் வைக்குற வெட்டியெறியாம?
இன்னும் வெச்சிருக்கிங்க



தங்கத்துரையின் கேள்வி தொடர,
ஆட்கள் இல்ல
பெரியப்பா வெட்டி எறிய
என்றாள் கவிதா.

எடுத்துவா கத்திய என்ற தங்கத்துரை வாசலில் கட்டிக் காய்ந்து போன வாழைகளின் இலைகளை களைந்து

அவ் வாழைகளை எட்டு துண்டுகளாக்கி விட்டு தேநீரைப் பருகினார்.

அவ்வேளை குப்பைகளை ஏற்றும் மாநகரசபை லொறி அதன் சங்கீத இசையுடன் வந்து



வாசலில் குப்பையாய் கிடந்த வழைகளை

ஏற்றிக் கொண்டு புறப்பட்டது.

அது புறப்பட்டதும் கட்டட கொத்துராத்தக்காரர்

நகுலேசின் வாகனம் வந்து நின்றது.
என்ன தம்பி என்று கேட்டார் தங்கத்துரை
இவ்வீடு கட்ட பாவித்த சாரத்துக்குரிய மூங்கில்கள் தேவையாக இருக்கிறது.

இன்றைக்கு எடுத்தப்போகச் சொன்னார் ஐயா என்றார் நகுலன்.

புள்ள கவிதா எங்கம்மா மூங்கில்கள் கிடக்கு

இந்தா கிடக்கு பெரியப்பா என்று தங்கத்துரையின் கேள்விக்கு பதில் கிடைத்தது.

தம்பி நகுலன் இந்தா கிடக்கு ஏத்துங்க

என்று உத்தரவு கொடுத்ததும் நகுலனின் கூலிகள்

அவைகளை பவுத்திரமாக தங்கள் லொறியில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டார்கள்.



மூலையில் கிடந்த மூங்கில்கள் திரும்பவும்

வீடுகட்ட புறப்பட்டு விட்டன.

தலைவாசல் அழகுக்கு நின்ற வாழைமரங்கள்

குப்பை மேட்டிற்கு போயின.
தொண்டன் எப்போதும் தம்பணி தொடர்வான்

தலைவன் அப்போது மட்டும் மிளிர்வான்



# மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

-- முருகபூபதி அவுஸ்திரேலியா --

" வாழ்ந்துதான் வாழ்வின் சுவையைச் சுவைக்கலாம். நடந்துதான் நமது பயணத்தை முடிக்கலாம்"



கல்முனைக்குப் புறப்படுவதற்கு முன்னர் நண்பர் மௌனகுருவிடம் செல்லத்தயாரானோம். அன்று முற்பகல் பெரியநீலாவணை விஷ்ணு மகா வித்தியாலயத்தில் எமது கல்வி நிதியத்தின் உதவிபெறும் மாணவர்களுடனான சந்திப்பும் தகவல் அமர்வும் நிதிக்கொடுப்பனவு நிகழ்ச்சியும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

மௌனகுரு அவர்களின் இல்லத்திற்கு முன்பாக கோபாலகிருஷ்ணனின் கார் தரித்தது. இல்லத்தின் முற்றத்திலிருந்து கணீரென்ற குரலில் ஒரு கூத்துப்பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது.

அந்த இல்லம் வாவிக்கரையில் இருந்தமையால் ரம்மியமாக காட்சியளித்தது. முன்பொரு (2010 இறுதியில்) தடவை நண்பர்கள் பூபாலசிங்கம் ரீதரசிங், அஷ்ரப் சிஹாப்தீன், கோபலகிருஷ்ணன் ஆகியோருடன் அங்கு வந்திருக்கின்றேன்.

சுனாமியின்போது மௌனகுரு - சித்திரலேகா தம்பதியர் அந்த இல்லத்தின் மேல்தளத்தில் நின்று தப்பித்த திகில் கதையை சொல்லியிருக்கின்றனர். மௌனகுரு அந்தத்திகிலையும் சுவாரஸ்யமாகவே சித்திரித்திருந்தார். அந்த நினைவுகளுடன் அங்கு பிரவேசித்தபோது முற்றத்தில் அமர்ந்து ஒருவர் பாடிக்கொண்டிருந்தார்.

எம்மைக்கண்டதும் அவர் தமது குரலைத்தாழ்த்தினார். "வேண்டாம். தொடருங்கள்" எனச்சைகையால் சொன்னதும் தொடர்ந்தார். பாடல் நின்றதும் அந்தக்கலைஞரை எமக்கு மௌனகுரு அறிமுகப்படுத்தினார்.

அவரது பெயர் கந்தப்பு மயில்வாகனம். வயது 76. இவரது கண்டி அரசன் என்னும் நாடகம் மட்டக்களப்பில் 1965 இல் மேடையேறியபோது மௌனகுருவும் பேராசிரியர் வித்தியானந்தனும் சென்று பார்த்து ரசித்திருக்கிறார்கள்.

அக்காலப்பகுதியில் வித்தியானந்தன் நாடகக்குழுவின் தலைவராகவும் மௌனகுரு உறுப்பினராகவும் இருந்திருக்கிறார்கள். கந்தப்பு மயில்வாகனத்தின் குரல்வளத்தில் ஈர்ப்புற்ற மௌனகுரு 1968 இல் தாம் தயாரித்து அரங்காற்றுகை செய்த சங்காரம் நாடகத்தில் கதையை நகர்த்திச்செல்லும் பிரதான எடுத்துரைஞராக அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

"சுழல்கின்ற சூரியனின் துண்டு பறந்ததுவே" என்ற கந்தப்பு மயில்வாகனத்தின் கணீர் குரலுடன் திரை திறக்குமாம். சங்காரம் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் மாநாடு கொழும்பில் லும்பினி அரங்கில் நடந்தவேளையில் அரங்கேறியிருக்கிறது. தலைமை வகித்தவர் கி. இலக்ஷ்மண அய்யர். இடதுசாரித்தோழர் என். சண்முகதாசன், பேராசிரியர் கைலாசபதி ஆகியோரும் இந்நாடகத்தை பார்வையிட்டுள்ளனர்.
அன்று நடந்த கவியரங்கில் கவிஞர்கள் சில்லையூர் செல்வராசன், நு.்.மான், முருகையன் ஆகியோரும் பங்கேற்றுள்ளனர். சங்காரம் நாடகத்தின் ஒளியமைப்பு ந. சுந்தரலிங்கம்.
அன்று நாடகத்தில் ஒலித்த கலைஞர் கந்தப்பு மயில்வாகனத்தின் அசாதாரணமான குரல் அனைவரையும் வெகுவாகக்கவர்ந்துவிட்டதாக மௌனகுரு அவரை எமக்கு அறிமுகப்படுத்தும்போது குறிப்பிட்டு நனவிடைதோய்ந்தார்.

பரந்த கடற்பரப்பில் கத்திக்கத்திப்பாடி தனது குரல்வளத்தை வளர்த்துக்கொண்டவர்தான் கந்தப்பு மயில்வாகனம் என்று தெரிவித்தார் மௌனகுரு. அன்றைய உரையாடலில் அரைநூற்றாண்டுக்கு முன்னர் அவருடன் தனக்கிருந்த உறவை மௌனகுரு சொன்னபோது, அந்தக்கம்பீரம் சற்றும் குலையாமல் மீண்டும் அந்த முற்றத்திலிருந்து அவர் பாடியதைக்கேட்டு சிலிர்த்தோம்.

அன்றைய தினம் மௌனகுருவின் பாரியார் சித்திரலேகா கொழும்பில் நின்றமையால் மட்டக்களப்பில் அவரை சந்திக்க முடியாமல் போய்விட்டது. மட்டக்களப்பிலிருந்து வெளியாகும் மகுடம் (ஆசிரியர் வி.மைக்கல்கொலின்) மௌனகுரு சிறப்பிதழ்கள், சார்வாகன் (குறுநாவல்) கிழக்குப்பல்கலைக்கழகத்திலே பேராசிரியர் மௌனகுருவின் தடங்கள் நூல் என்பனவற்றையும் அந்தச் சந்திப்பில் பெற்றுக்கொண்டேன்.

2003 ஆம் ஆண்டில் மௌனகுருவுக்கு மணிவிழா நடந்தபோது வெளியிடப்பட்ட மௌனம் சிறப்பு மலரில் சார்வாகன் இடம்பெற்றுள்ளான். இம்மலர் வெளிவந்தகாலத்திலேயே அதனைப்படித்துவிட்டு அதன் சிறப்பு பற்றி வியந்திருக்கின்றேன்.

பாண்டவர்கள் குருஷேத்திர போரிலே வெற்றிவாகை சூடிய பின்னர் அரசு அமைத்தபோது அந்த வெற்றிக்களிப்புடன் அரசுக்கட்டில் ஏறியவேளையில் அவர்களின் வெற்றி பல்லாயிரம் உயிர்களைக்குடித்துத்தான் சாதிக்கப்பெற்றது என்பதை பகிரங்கமாகச் சொல்லி கண்டித்த துறவிதான் சார்வாகன். சார்வாக மதம் இருந்ததாகவும், திரௌபதையும் அந்த மதத்தை பின்பற்றியிருப்பதாகவும் மெல்பனுக்கு "சார்வாகன்" ரீநிவாசன் வருகை தந்த சமயத்தில் அவருடனான ஒரு கார் பயணத்தில்தான் எனக்கு சொல்லியிருந்தார்.
அவருக்கு சார்வாகன் என்ற புனைபெயர் எவ்வாறு வந்தது எனக்கேட்டு அவரை நேர்காணல் செய்தபோதுதான் அந்தக்கதையும் தெரியவந்தது.

சார்வாகன் கதைபோன்று மகாபாரதத்தில் ஆயிரக்கணக்கான உப கதைகள் இருக்கின்றன என்பதற்கு ஜெயமோகன் எழுதிவரும் வெண்முரசு மிகச்சிறந்த உதாரணம்.

மௌனகுரு அவர்களை விமர்சகராகவும் கூத்துக்கலைஞராகவுமே அறிந்துவைத்திருந்த எனக்கு 2003 இல் வெளியான மௌனம், அவர் பற்றி நான் அறியாத பக்கங்களையும் அறிமுகமாக்கியிருக்கிறது.

மௌனகுருவின் சார்வாகன், காண்டவதகனம், இராவணேசன் உட்பட பல படைப்புகள் சமகால அரசியல் சமூகத்துடனும் நாம் கடந்துவந்த ஈழப்போர்க்காலத்தையும் ஒப்பிட்டுப்பார்க்கத் தூண்டுகிறது.

மக்களுக்காக பேசியவராகவும் மக்களையும் பேசவைத்த ஆளுமையாகவுமே மௌனகுருவைப் பார்க்கின்றேன்.

நண்பர் பேராசிரியர் செ. யோகராஜா, கிழக்குப்பல்கலைக்கழகத்தில் மௌனகுரு பதித்திருக்கும் ஆழமான தடங்கள் பற்றி விரிவாக தனிநூலே எழுதியிருக்கிறார்.

மகுடம் சிறப்பிதழின் முகப்பில் , " வாழ்ந்துதான் வாழ்வின் சுவையைச் சுவைக்கலாம். நடந்துதான் நமது பயணத்தை முடிக்கலாம்" என்ற மௌனகுருவின் வாசகமும் பதிவாகியிருக்கிறது.

மகுடம் ஏற்கனவே தமிழ்த்தூது தனிநாயகம், தர்மு சிவராம், எஸ். பொ. ஆகியோருக்காகவும் சிறப்பிதழ்




வெளியிட்டிருக்கிறது.

" ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒருவகையில் ஒரு திறனை (Skill) கொண்டிருப்பான். இன்றைய விஞ்ஞான உலகு திறன்கொண்ட மனிதர்களின் உலகாக மாறிவருகின்றது. திறன்கொண்ட மனிதர்களே தமது திறன்களை பயன்படுத்தும் மனிதர்களே வெற்றிபெறுகின்றனர்.

அந்தவகையில் கலை இலக்கிய செயற்பாடுகளான நடித்தல், எழுதுதல், பாடுதல், இசைத்தல், ஆய்வுசெய்தல், பேசுதல் எல்லாம் தனிமனிதர்களின் திறன்களே. சிலர் ஒன்றிற்கு மேற்பட்ட திறன்களையும் கொண்டிருப்பர். இந்த திறன்கள் மதிக்கப்படல் வேண்டும். அதுவும் காலத்தில் அது கௌரவப்படுத்தப்படல் வேண்டும்.

திறன்களுக்காக நாம் மனிதர்களை கொண்டாடுவதில்லை. ஆனால், தமது திறன்களை தமது வளர்ச்சிக்காக மட்டுமன்றி தன் சமூகத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும், ஒட்டுமொத்த மனிதகுலத்தின் வளர்ச்சிக்கும் பயன்படுத்தும் மனிதர்களின் திறன்களை அவர்களது திறன்களுக்காக அவர்களை நாம் கொண்டாடுவோம்.

அந்தவகையில் கடந்த பல வருடங்களாக மட்டக்களப்பு மண்ணின் கலை இலக்கிய செயற்பாடுகளுக்கு குறிப்பாக மட்டக்களப்பு கூத்துக்கலையை உலகறியச்செய்து, அதனை சர்வதேச அரங்கிற்கு நகர்த்தும் முயற்சியில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு கலை இலக்கியத்தினை இனநல்லுறவுக்காகவும் பயன்படுத்தி வரும் பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களுக்கு சிறப்பிதழ் வெளியிட்டு அவரை கொண்டாடுவதில் மகுடம் பெருமை கொள்கிறது." என்று இச்சிறப்பிதழின் ஆசிரியத்தலையங்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இச்சிறப்பிதழில் என்னைக் கவர்ந்த - பாதித்த பல ஆக்கங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அவற்றில் மிகவும் சுவாரஸ்யமானது கவிஞர் வ. ஐ.ச. ஜெயபாலன் எழுதியிருக்கும் கவிதை. அதனை அவர் மகுடத்திற்காக அல்ல, வடமாகாண சபை முதல்வர் நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரனுக்கு எழுதிய கவிதை வரியில் எழுதிய கடிதம்.

"ஈழத்தமிழன் முகமான வடமோடிக்கூத்தை அங்கீகரியுங்கள். வடமோடி கூத்தை வளர்க்கும் அண்ணாவிமார்களையும் பேராசான் மௌனகுருவையும் கௌரவியுங்கள்" என்னும் தொனிப்பொருளில் அக்கவிதை அமைந்திருக்கிறது.

கருத்தியல்கள் மோதும் களமாகவும் இச்சிறப்பிதழ் விளங்குகிறது. மௌனகுருவின் வாழ்வையும் பணிகளையும் அவர் கடந்துவந்துள்ள பாதையையும் கலை, இலக்கியவாதிகளும் - மாணவர்களும் தெரிந்துகொள்வதற்கு மகுடத்தில் இடம்பெற்றுள்ள ஆக்கங்களும் படங்களும் உதவும்.

மகுடம் இரட்டைச்சிறப்பிதழாகவும் வெளிவந்து சாதனைபுரிந்திருக்கிறது. இரண்டு இதழ்களும் மொத்தம் 200 பக்கங்களில் வெளியாகி அசத்தியிருக்கின்றன.

1949 முதல் 2017 வரையில் (சுமார் 68 வருடங்கள்) மௌனகுருவின் நாடகங்களும் ஆற்றுகைகளும் பற்றிய விரிவான பட்டியல் பதிவொன்றும் இச்சிறப்பிதழில் இடம்பெற்றிருக்கிறது. மகுடம் ஆசிரியர் வி. மைக்கல்கொலின் தமது தீவிர தேடுதலில் அதனைத்தொகுத்திருக்கிறார்.

வாழும் சாதனையாளர் பேராசிரியர் மௌனகுருவை கொண்டாடுவதற்காக மகுடம் ஆசிரியர் மேற்கொண்டிருக்கும் அயராத உழைப்பினை ஒவ்வொரு பக்கங்களிலும் காணமுடிகிறது.

அதனால் இந்தப்பதிவின் ஊடாக மௌனகுருவை வாழ்த்துவதுடன் மகுடம் ஆசிரியர் மைக்கல் கொலினையும் பாராட்டுகின்றோம்.

ஓம் விஸ்வப் பிரம்மனே நமக

ஐஸ்வர்யம் மிகு
அசுஷயதிருதியை
சுபா
கோல்ட் ஹவுஸ்
02A, முனை வீதி, 1ம் குறுக்கு, மட்டக்களப்பு.
T.P:065-2224713 FAX:065-2223431

2018 ஆம் ஆண்டின் மிக முக்கியமானதும் சிறப்பு வாய்ந்ததுமான நாள் அக்ஷயதிருதியை நாளாகும்.
பிறந்துள்ள விளம்பி வருசம் சித்திரை ஐந்தாம் நாள்
2018.04.18 புதன்கிழமை

ஐஸ்வர்யம் பெருகும் அக்ஷயதிருதியில் உங்கள் இல்லங்களில் செல்வம் செழிக்க நகைகளை கொள்வனவு செய்வதற்கு எம்மை நாடுங்கள்.
தங்கள் அனைவரையும் இத்தினத்தில் அன்புடன் அழைக்கின்றோம்.

அக்ஷயதிருதியை முன்னிட்டு விஷேட விலைக்கழிவும் பரிசுப்பொருட்களும் வழங்கப்படும்.

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
அழகிற் சிறந்த பவுண் தங்க நகைகளுக்கு நம்பிக்கையான இடம்.
நம்பிக்கை! நாணயம்!! நேர்மை!!!

ஓம் விஸ்வப் பிரம்மனே நமக

ஐஸ்வர்யம் மிகு
அசுஷயதிருதியை
ஸ்ரீ கிருஷ்ணா
கோல்ட் ஹவுஸ்
இல.55 பிரதான வீதி, செங்கலடி.
T.P:065-2240139, 065-2240873

2018 ஆம் ஆண்டின் மிக முக்கியமானதும் சிறப்பு வாய்ந்ததுமான நாள் அக்ஷயதிருதியை நாளாகும்.
பிறந்துள்ள விளம்பி வருசம் சித்திரை ஐந்தாம் நாள்
2018.04.18 புதன்கிழமை

அக்ஷயதிருதியை முன்னிட்டு விஷேட விலைக்கழிவும் பரிசுப்பொருட்களும் வழங்கப்படும்.

ஐஸ்வர்யம் பெருகும் அக்ஷயதிருதியில் உங்கள் இல்லங்களில் செல்வம் செழிக்க நகைகளை கொள்வனவு செய்வதற்கு எம்மை நாடுங்கள்...
தங்கள் அனைவரையும் இத்தினத்தில் அன்புடன் அழைக்கின்றோம்.


ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
அழகிற் சிறந்த பவுண் தங்க நகைகளுக்கு நம்பிக்கையான இடம்.
நம்பிக்கை! நாணயம்!! நேர்மை!!!
அவற்றிற்கு இன்றே நாடுங்கள்.



PUSHPA CONSTRUCTION
HOME DESIGNERS & BULDER
No:23,Pumping Station Road
Palameenmadu, Batticaloa
கட்டிடநிர்மாண சேவைகள் ஒரே கூரையின் கீழ்
077 990 1403

FCC இன் புத்தாண்டு புத்துணர்வுச் சந்தை
காலம் 11,12,13 ஏப்ரல் 2018
இடம் FCC Super Mall முன்றலில்
இப்புத்தாண்டில் எமது ஆரோக்கியம் பேணும் பாரம்பரிய கைத்தொழில் குடிசைகள் கோபுரங்களாகட்டும்.
இனைந்து ஊக்குவிப்போர் மட்டக்களப்பு கச்சேரி மற்றும் அரங்கம் ஊடகம்

FCC SUPER MALL



வாங்குங்கள் சேமியுங்கள் கொண்டாடுங்கள்
ஒரே கூரையின் கீழ் வாழ்வின் அத்தியவசிய பொருட்தேவையை பூர்த்தி செய்ய அன்புடன் வரவேற்கின்றோம்
இல.16, மத்திய வீதி, மட்டக்களப்பு.
Tel: 065 22 22 722, Hot Line: 077 20 72 722 e-Mail: tiptopph @gmail.com